மாநகர சபை, யாழ்ப்பாணம்.
மாநகர சபை, யாழ்ப்பாணம்.
மாநகர ச... , யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 15.00


*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 06 திங்கட்கிழமை (22.09.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 278










கொழும்பில் பொலிஸ் பதிவு நிலையங்களில் சிறுவர்கள், முதியவர்கள் உட்பட்டோர் பதிவினை மேற்கொண்டு திரும்புவதனையும் பதிவுக்காக நீண்ட வரிசையில் காத்திருப்பவர்களையும் படங்களில் காணலாம்.

# ஆயிரக்கணக்கான வடபகுதி மக்கள் நேற்று மீண்டும் பொலிஸாரிடம் பதிவு

## 108 இடங்களில் பதிவு நிலையங்கள்

(கொழும்பு)

வடபகுதியிலிருந்து கடந்த 2003 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஐந்து வருட காலத்திற்குள் கொழும்பு உட்பட மேல் மாகாணத்திற்குச் சென்ற மக்கள் பொலிஸ் தலைமையகத்தின் உத்தரவுக்கு அமைய நேற்று தம்மை மீண்டும் பதிவு செய்து கொண்டனர். மேல் மாகாணத்தில் கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் பொலிஸ் பதிவுக்கு என விசேடமாக அமைக்கப்பட்ட இடங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் நேற்று காலை முதல் மாலை வரை பதிவுசெய்து கொண்டனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## எம்.பிக்களை கட்சிக்குள் இழுக்க ஆளும் தரப்பு தீவிர நடவடிக்கை

(கொழும்பு)

வரவு செலவுத் திட்டத்தின்போது சாதகமான முடிவுகளை எட்டும் நோக்கில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சிகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தம்பால் ஈர்க்கும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளன. வரவு செலவுத் திட்டத்தில் வெற்றி பெற்றுக் கொள்வதற்காக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை ஆளுங்கட்சியில் இணைந்துக் கொள்ளும் படலத்தை ஆரம்பித்துள்ளது. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு உள்ளிட்ட பல காரணங்களை முன்வைத்து ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் கருத்து முரண்பாடு நிலவுவதாக தகவலறிந்த வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ச-5)

## விடுதலைப் புலிகள் ஆயுதங்களை தரையிறக்கியுள்ளனர்-சண்டே ரைம்ஸ்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு தொகுதி ஆயுதங்களை தருவித்துள்ளனர் என்று கொழும்பிலிருந்து வெளிவரும் சண்டே ரைம்ஸ் ஆங்கில வார ஏடு தெரிவித்துள்ளது.

வவுனியா படைத் தலைமையகம் மீது கடந்த 9ஆம் திகதி விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் தொடர்பாக ஆராய்வதற்கு அரசு விசாரணைக்குழுவை நியமித்துள்ளது.

வவுனியா வான் (12 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் ஜனாதிபதி டி.பி.விஜயதுங்க காலமானார்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி டி.பி.விஜயதுங்க தனது 92-வது வயதில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் கண்டி வைத்தியசாலையில் காலமானார்.

கண்டி வைத்தியசாலையின் பிரத்தியேக வாட்டில் சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே நேற்றுக்காலை அவர் மரணமடைந்ததாக வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்தது.

கண்டி மாவட் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களை பிற நாட்டவர் போல் நடத்துவதை அனுமதிக்க முடியாது

### பிரபா கணேசன் அறிக்கை

(கொழும்பு)

ஐந்து வருடத்திற்குள் கொழும்புக்கு வந்துள்ள தமிழ் மக்களை மட்டும் பொலிஸ் பதிவுகளுக்கு ஆளாக்கியிருப்பது இலங்கையின் அரசியல் அமைப்பிற்கு முரணான செயற்பாடாகும் என பொலிஸ் பதிவுகள் இடம்பெற்ற கொழும்பு நகர பொலிஸ் நிலையங்களிற்கு கொழும்பு மாநகர சபை உறுப்பினர்களான ந.குமரகுருபரன், வேலணை வேணியன், எஸ்.ராஜேந்திரன் மற்றும் எப்.எம்.ஷியாம் ஆகியோருடன் நேரடி விஜயம் செய்த மேலக மக்கள் முன்ன (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருக்கோணேஸ்வரத்தின் ஆலய குரு சுட்டுக்கொலை

(திருகோணமலை)

திருகோணமலையில் திருக்கோணேஸ்வரர் ஆலய குரு அடையாளம் தெரியாத ஆயுதக்குழுவினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

திருகோணமலை சிறி சண்முகானந்தா இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஆலய குரு மீது நேற்று (12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப் போர்முனையில் நேற்று 4 தடவைகள் விமானத் தாக்குதல்

(கொழும்பு)

வன்னிப் போர்முனைப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீது அடுத்தடுத்து நான்கு தடவைகள் நேற்று விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்திருக்கின்றது.

கிளிநொச்சியில் நாச்சிக்குடா மற்றும் அக்கராயன்குளம் பகுதிகளில் விமானப் படையின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.கச்சேரியடியில் இளைஞன் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கச்சேரிக்கு அண்மையாக பாரதி ஒழுங்கையில் நேற்று மாலை 3 மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகள் இளைஞன் ஒருவரை துரத்திச் சென்று வீடொன்றுக்குள் வைத்து சுட்டுக்கொலை செய்துள்ளனர்.

சம்பவத்தில் மீசாலை அல்லாரையைச் சேர்ந்த தர்மலிங்கம் குமார்ராஜ் (வயது 29) (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசிற்கு எதிரான முக்கிய வழக்குகள் விசாரணை இன்று

(கொழும்பு)


அரசியல் சாசனசபை உருவாக்கம் உள்ளிட்ட முக்கிய வழக்குகள் சில இன்று உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

நாட்டின் சட்டத்திற்கு முன்னால் யாவரும் சமமே என உயர் நீதிமன்றம் ஏற்கனவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு அறிவித்திருந்தமை (12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# விடுதலைப்புலிகள் இன்னமும் பலமுடனேயே இருக்கிறார்கள்

## பாதுகாப்பு ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் 80 வீத ஆட்பலத்தைத் தாம் குறைத்துவிட்டதாகப் படைத்தரப்பு கூறுகின்றபோதும் அவர்கள் இன்னமும் பலமாகவே இருக்கின்றார்கள் என்பதைக் கடந்த இரண்டு வாரங்களாகப் படையினருக்கு எதிரான தாக்குதலின் போது கண்டு கொள்ள முடிந்துள்ளதாக சண்டே ரைம்ஸின் பாதுகாப்பு ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியை நோக்கி நகர்வுகளைப் படையினர் முன்னெடுக்கின்ற நிலையில் அப்பகுதிகளை நோக்கிப் படையினர் தமது எறிகணை வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனையடுத்து அங்குள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர்ந்து வருவதாகப் பாதுகாப்பு ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் தமிழீழ விடுதலைப் புலிகளும் புதிய பாதுகாப்பு நிலைகளை அமைத்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். முறிகண்டிப் பகுதியில் இருந்து தற்போதுசுமார் 60வீதமான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு சென்றுள்ளனர்.

கடந்த வாரத்தில் அக்கராயன் பகுதியில் இடம்பெற்ற மோதல்களில் இரண்டு தரப்பிலும் உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டுள்ளன. கொக்காவில், ஜெயபுரம் போன்ற இடங்களை நோக்கிப் படையினர் தமது நகர்வுகளை ஆரம்பித்துள்ளனர்.

நாச்சிக்குடா பகுதியில் கடந்த வாரம் படையினர் இரண்டுதடவைகளாக மேற்கொண்டமுன்னகர்வுகளை தமிழீழ விடுதலைப் புலிகளினால் முறியடிக்கப்பட்டன.

இந்த நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றுக்கான ஆயத்தங்களை மேற்கொண்டு வருவதாக இக்பால் அத்தாஸ் குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம் படையினரின் நகர்வுக்கு எதிராகத் தமிழீழ விடுதலைப்புலிகள் பாரிய எதிர்த் தாக்குதல்களை நடத்துவர் என்பதில் சந்தேகமில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே கிளிநொச்சியை நோக்கிய நகர்வு மிகவும் உக்கிர கட்டத்தை அடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-5)

# வன்னியில் இடம்பெயரும் மக்கள் மனிதாபிமான உதவியின்றி பெரும் அவதி

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மற்றும் சர்வதேச முகவர் அமைப்புக்கள் வன்னியை விட்டு சென்ற பின்னர் மனிதாபிமான நெருக்கடிகள் பல வழிகளிலும் அங்கு மேலோங்கியுள்ளதாக வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் தெரிவித்துள்ளது.

நடு நிலை அவதானிப்பாளர்கள் எவரும் அங்கு இல்லாமையே இதற்கு காரணம் என வும் அச் செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஐ.நா. முகவர் அமைப்பு 16ஆம் திகதி செவ்வாய்க் கிழமையுடன் வெளியேறியது கிளிநொச்சிக்கான நிவாரணப் பொருட்கள் கொண்ட வாகனத்தொடர் அணிகள் 15ஆம் திகதி திங்கட்கிழமையும் 17ஆம் திகதி புதன் கிழமையும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் 3 தினங்கள் செல்ல தீர்மானிக்கப்பட்டிருந்தது.

கிளிநொச்சிக்கான வாகனத்தொடர் அணி இலங்கை இராணுவத்தினால் ஓமந்தைச்சாவடியில் தடை செய்யப்பட்டது.

இதன் விளைவாக கிளிநொச்சிக்கு சென்றடைய வேண்டிய உணவுப்பொருட்கள் அடங்கிய 60 வாகன தொடர் அணிகள் தடுக்கப்பட்டன. இது ஏற்கனவே நிலவிய தட்டுப்பாட்டை மேலும் சிக்கலான நிலைக்கு கொண்டுவந்துள்ளது.

உணவுப்பொருட்களும் இதர நிவாரணப்பொருட்களும் ஓமந்தை சோதனைச் சாவடி மூலமாகவே வன்னிக்கு கொண்டுவரப்படுகின்றன. இந்த தொடர் அணிப்பிரச்சிணை இலங்கை இராணுவத்தால் ஜனவரி 2008இல் ஓமந்தைச் சோதனைச்சாவடியில் ஏற்படுத்தப்பட்டது.

இதன் விளைவாக ஜனவரி முதல் அதிக பட்சமாக 20 லொறிகள் மாத்திரமே நாளாந்தம் அனுமதிக்கப்பட்டன.

ஜனவரி மாதம் தொடர் அணிப்பிரச்சினை ஏற்படுத்தப்படுவதற்கு முன்னர் சராசரியாக 70 லொறிகள் நாளாந்தம் அனுமதிக்கப்பட்டுவந்தன. அது முதல் அடிப்படை அத்தியாவசியப்பொருட்களான மா, பருப்பு வகைகள், சீனி மற்றும் பால்மா ஆகியவற்றின் கையிருப்பு மாதாந்தம் குறைந்தே வந்துள்ளது.

இடம் பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை 2008இல் அதிகரித்ததன் காரணமாக அற்பமாக இருந்த கையிருப்பை இடம் பெயர்ந்த மக்களுக்கு நிவாரீணமாக வழங்கப்படுவது மட்டுப்படுத்த வேண்டி ஏற்பட்டது. ஆகஸ்ட் மாதத்தில் தட்டுப்பாட்டு நிலைமையைப் போக்க உலக உணவுத்திட்டம் தீர்மானித்தது. ஆனால் செப்ரெம்பர் மாதமே வன்னிக்கு வெளியே உள்ள ஐ.நா. முகவர் அமைப்புகளுக்கு அறிவிக்கப்பட்டது.

### இடம்பெயர்வோர் தொகை அதிகரிப்பு

கிளிநொச்சியைக் கைப்பற்றுவதற்கான இராணுவத்தின் நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்வோரின் தொகை இம் மாதம் அதிகரித்துள்ளது .கிளிநொச்சி மாவட்ட செயலக வட்டாரம் இம்மாதம் மேலும் 26ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாகக்கூறியுள்ளது.

புதிதாக இடம்பெயர்ந்த மக்களுக்கு இதுவரை எந்தவித நிவாரணமும் கிடைக்கவில்லை . ஒரு இலட்சத்து 62 ஆயிரத்து 191பேர் இடம்பெயர்ந்த நிலையில் அவர்களுக்கு 913 மெற்றிக்தொன் அரிசி , 913 மெற்றிக்தொன் கோதுமை மா (45 மெற்றிக் தொன் கையிருப்பில் உண்டு), 274 மெற்றிக் தொன் பருப்பு வகைகள் (9 மெற்றிக்தொன் கையிருப்பில் உண்டு), 913 மெற்றிக் தொன் சீனி தேவைப்படுவதாக மாவட்ட செயலக வட்டாரம் தெரிவிக்கின்றது.

வாகன தொடர் அணிப்பிரச்சினையால் இடம் பெயர்ந்த மக்களின் நிலைமை மிக மோசமான கட்டத்தை அடைந்துள்ளது.

### இடம்பெயர்ந்தோருக்கான புகலிடம்

கிளிநொச்சி மாவட்ட செயலக வட்டாரத்தின் தகவலின்படி இடம் பெயர்ந்த 6 ஆயிரத்து 500 குடும்பங்கள் தற்போது புகலிடம் இன்றி மர நிழலின் கீழ் வாழ்வதாக தெரிய வருகிறது. இவர்களுக்கான புகலிடம் வழங்கப்படவேண்டியது ஒருஅவசர தேவையாகவுள்ளது.

இதற்கு கூடாரங் கள் கொண்டு வர வாகனத்தொடர் அணி அனுமதிக்கப்படல் வேண்டும்.

கூடாரங்கள் வழமையாக சர்வதேச முகவர் அமைப்புகளால் வழங்கப்படுவது உண்டு .ஆனால் அங்கு அவை கிடைப்பதில்லை.

### குடி தண்ணீர்

இடம்பெயர்ந்தோருக்கு குடிநீர் விநியோகிக்கப்பதில் முக்கிய பிரச்சினையாக இருப்பது எரிபொருள். எரிபொருள் தட்டுப்பாடு வாகனத் தொடர் அணிக்கும் பிரச்சினையாக இருப்பதோடு நேரடித்தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

வைத்தியசாலைகள் மற்றும் அரசாங்க அலுவலகங்களுக்கு மட்டும் கண்டிப்பாகவும் குறைந்த கோட்டா முறையிலும் பெற்றோல் , டீசல் வழங்கப்படுகின்றது.

இதைவிட வன்னிக்கு எரிபொருள் கொண்டுசெல்ல அனுமதிக்கப்படுவதில்லை. இதர நோக்கங்களுக்காக மண்ணெண் ணெய் மாத்திரம் அனுமதிக்கப்படுகின்றது.


கிளிநொச்சி அரசாங்க அதிபரின் மதிப்பீட்டின் படி தேவையான மண்ணெண்ணெய் 700 ஆயிரம் லீற்றராகும்.

ஆனால் 2008 மார்ச் வரை அனு மதிக்கப்பட்டது 600ஆயிரம் லீற்றரேயாகும்.

இதுவும் பின்னர் 500ஆயிரம் லீற்றராகக் குறைக்கப்பட்டது. இப்போது 400ஆயிரம் லீற்றராகியுள்ளது.

(அ-5)







# இன்று ஒரு தகவல்

## சங்கீத சங்கடம்

எனக்கு மிகவும் வேண்டப்பட்ட ஒருவர் , ஒரு நாள் என்னைத் தேடி வந்தார். ''நான் நாதஸ்வரம் வாசிக்க கற்றுக் கொள்ளப் போகிறேன்!''என்றார்.

நான் பயந்தே போய் விட்டேன். ஏனென்றால் அவரைப் பற்றி எனக்கு நன்றாகவே தெரியும். அதனால் "உங்களுக்கு ஏன் இந்த விபரீத ஆசை! சங்கீதம் என்பது ஒரு சுகமான அனுபவம்! நாமும் கஷ்டப்பட்டு அதையும் கஷ்டப்படுத்த வேண்டாமே!"என்றேன்.

அவர் அதைக் காதில் வாங்கிக்கொள்வதாகவே இல்லை. மிகவும் உறுதியுடன் இருந்தார். சரி...வேறு வகையில் அவரின் எண்ணத்தை மாற்றலாம் என்று நினைத்து, ஒரு நேயர் எனக்குத் தெரிவித்திருந்த ஒரு கதையை அவரிடம் சொன்னேன்.

ஒரு ஊரில் ஒரு கோயில் இருந்தது. அந்தக் கோயிலில் உள்ள ஸ்தல விருட்சத்தில் (மரம்) ஒரு பிரம்ம ராட்சஷன் இருந் தான். அவன் ஒரு காலத்தில் பல பாவங்கள் செய்து சாபத்தினால் பிரம்ம ராட்சஷனாக மாறியவன்.

சாப விமோசனத்துக்காக அந்த மரத்தில் காத்துக் கொண்டிருந்தான். அவனுக்கு உருவம் கிடையாது. அதனால் கண்களால் அவனைக் காணவும் முடியாது.

அந்தக் கோயிலில் ஒருவர் தினமும் நாதஸ்வரம் வாசிப்பார். வாசிக்கிறார் என்றே சொல்ல முடியாது . ஊதுவார் ,அவ்வளவு தான்! முறையான பயிற்சி இல்லாதவர்.

தினமும் காலையிலும் மாலையிலும் வாசிப்பார். பிரசாதம் கொடுப்பார்கள். அதை வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டு மறுபடியும் வாசிப்பார். இப்படியே அவரது வாழ்க்கை போய்க் கொண்டிருந்தது.

ஒரு நாள் அவர் நீண்ட நேரம் வாசித்து விட்டு , இரவு வீட்டுக்குப் புறப்பட்டார். அப்பொழுது அந்த மரத்திலிருந்த பிரம்ம ராட்சஷன் அவரிடம் போய் பரிதாபமாக பேசியது.

" இதோ பார் ... என்னை நீ கண்களால் பார்க்க முடியாது. இருந்தாலும் நீவாசிப்பதை தினமும் நான் கேட்டுக் கொண்டு தான் இருக்கிறேன். எனக்கொரு உதவி செய்வாயா?" என்று கேட்டது.

''என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டார் இவர்.

" இனி மேல் நீ வாசிப்பதை விட்டுவிட வேண்டும்!"என்றது. "ஏன் அப்படிச் சொல்கிறாய்?"என்று கேட்டார் இவர்.

'' நான் ஏற்கனவே ஒரு பாவம் பண்ணி விட்டு சாப விமோசனத்துக்காக காத்துக் கொண்டிருந்தாலும் சங்கீத ஞானம் உள்ளவன் தான்...நீ வாசிப்பது கொஞ்சம் கூட நன்றாக இல்லை. அபஸ்வரமாக இருக்கிறது!

என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை! இதே மாதிரி நீ தினமும் வாசித்தால் சாப விமோசனம் கிடைக்க முன்பே நான் செத்துப் போனாலும் போய் விடுவேன்.

இப்பொழுது உன் வாசிப்பைக் கேட்டு துரும்பாக இளைத்து விட்டேன்!'' என்றது. " நீ சொல்வது சரிதான், நான் வாசிப்பதை என்னாலேயே சகிக்க முடியவில்லை! இருந்தாலும் இதை விட்டால் எனக்கு வேறு வழியில்லை!

சாப்பாட்டுக்கே நான் இதைத்தான் நம்பியிருக்கிறேன். இதை விட்டுவிட்டு என்ன செய்வது?" என்றார் அவர்.

''உனக்கு சாப்பாட்டுக்கு ஏதாவது வழி பண்ணினால் இந்த வாசிப்பை விட்டு விடுவாயா?'' என்று கேட்டது அது.

" விட்டு விடுவேன் !"என்றார் இவர்.

அப்படியானால் நான் சொல்வதைக் கேள் !இந்த ஊர் ராஜாவின் மகளைப் போய் நான் பிடித்துக் கொள்கிறேன். தன்மகளுக்குப் பேய் பிடித்து விட்டது என்று தெரிந்தவுடன் அந்த ராஜா ஊரிலுள்ள மந்திரவாதிகளையெல்லாம் கூப்பிட்டுப் பேய் ஓட்டுவார்! நான் யாருக்கும் அசைந்து கொடுக்காமல் இருந்து விடுகிறேன்.

கொஞ்ச நாள் கழித்து நீ அந்த அரண்மனைக்கு வா. "நான் அரச குமாரிக்கு பிடித்திருக்கும் பைத்தியத்தை சரி செய்கிறேன். "என்று சவால் விடு. அதன் பின்னர் நாதஸ்வரத்தை வாசி. நான் அந்தப் பெண்ணை விட்டு ஓடி விடுகிறேன்.

உடனே ராஜா உனது திறமையைப் பாராட்டி பொன்னும் பொருளும் நிறையக் கொடுப்பார். அதை வைத்துக் கொண்டு நீயும் உன் பரம்பரையும் சுகமாகக் காலம் தள்ளலாம் !என்று யோசனை சொல்லியது.

இவரும் யோசித்துப் பார்த்து விட்டு , சரியென்று ஒத்துக் கொண்டார்.

இந்தத்திட்டத்தின் படியே எல்லாம் நடந்தது. ராஜாநிறைய பரிசு கொடுத்தார். இவரும் நாதஸ்வரம் வாசிப்பதை விட்டு விட்டார்.

இந்தக் கதையை எதிரில் உட்கார்ந்திருக்கும் நண்பரிடம் சொன்னேன். அப்படியும் அவர் நாதஸ்வரம் கற்க வேண்டும் என்ற ஆசையை கைவிட்டதாகத் தெரியவில்லை.

சரி... இவரை எப்படி வழிக்குக் கொண்டு வரலாம் என்று யோசித்துப் பார்த்தேன். கடைசியாக ஒரு விஷயத்தைச் சொன்னேன். அதைக் கேட்டபின்னர் தான் "நான் நாதஸ்வரம் கற்கும் யோசனையை கை விடுகிறேன்!'' என்று ஒத்துக் கொண்டார்.

நான் என்ன சொன்னேன் தெரியுமா? "நீங்க நாதஸ்வரம் வாசிக்க கற்றுக் கொள்ள வேண்டுமென்று முடிவு செய்தால் நான் உங்களுக்கு உதவியாக தவில் வாசிக்கக் கற்றுக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்!'' என்றேன். அவ்வளவு தான்!ஆள் அம்பேல்!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ்.மாவட்ட பாடசாலைகளின் தரம் 5 புலமைப் பரிசில் பெறுபேறுகள்

**ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை**

மு.கோகுலன்-150, தி.கிரிதரன்-146, சி.லகுபரன்-140, லோ. சிவலக்ஷன்-140, உ.நிஷோதா-137, ர.தர்சிகா-135, ஜா.மாதங்கி-133, ரா.கஜானன்-132, கி.மோகன பிரசாத்-128, ரா.யோகதீபன்-127, சா.சௌமியா-126,அ.பவித்திரன்-121, தே.விதுஷன்-120, வி.கஜலக்ஷன்-119 , ம.சாயிசங்கர்-118.

**வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி**

எம். கோகுலன்-152, ஆர். சதுர்சன்-151, எஸ். பிரணவசுதன்-145,கே. சனாதனி-143,கே.தர்ஷன்-143,எஸ்.தர்ஷிகா-142, பி.பிரதீஸ்-141, ஆர். இலக்கியா-137, ரி.பரதன்-133, எஸ்.குலராஜ்- 132, எஸ். சிவகரன்-132, ரி.தேவசயன்-132, எஸ்.அனோஜா-131, ரி.சுதர்சன்-126, கே.பானுஜன்-125, என். நிஷோதா-124, ரி.மதுஷன்-121, என்.நிவேதா-121, கே.மோகனா-121, பி.கஜலக்ஷன்-120, என்.ஜசிந்தன்-120, கே.தனேஷன்-119, ரி.பவிதா-117, எஸ்.சரவணன் -117, கே. தனாளினி-117, வி.வித்தியகரன்-116, கே.ஜனாதனன்-115.

**உடுவில் பெண்கள் கல்லூரி**

நி.டிலக்சேஸ்வரன்-156, இ.கிருஷ்ணமேனன்-148, அ.செந்துஜன்-145,ஓ.ஸ்ரீபானுஜா-143, யோ.வஜிகரன்-143, த.கெசீதா-140,கி.ஆருண்யா-137, ம. காயத்திரி-137,பா.ஸ்ரீ கஜன் -137, வி.அருண் -136, தி.பிரியங்கன் -135,வ.பொன்மகள்-134, இ. கோகுலன்-134, து .துவாரகன் -133, த.கிறிஸ்டின் தேவமிர்தா-132, ரா.அனுராகவன்-132,

சி.காயத்திரி-131, வி.திவ்வியன்-131, சி.திவ்வியா-131, வி.நிதுர்ஜினி-130, ச.அச்சுதன்-130, இ.கஜன்சிகா -130, சி.சிவப்பிரியா-128, தி.சதுர்கஸ்தன்-128, க.கண்ணன்-127, நா.ரிஷிகேஷன்-127, உ.அட்சயா-126, பா.கீர்த்தனன் -126, சி.கஜன்சிகா-125, ஸ்ரீ.ரிகாஷன்-124, த.இராசன்-123, அ.ரவிவர்மன்-123, ஆ.சிந்துஜன்-122, மை.சானுகன்-122, செ.பபிகரன்-122,சு.வேதன்சன்-121, பா.பாலகிருஷாந்-120, சி.வர்சனன்-120, இ.யாதவி-119, இ.சிவானிகா-119, க.வித்தகன்-118, இதுஷாகரன்-118, க.கலைமகள்-118, பி. வினுஜா-117, ப.துளசிராம்-115, க.யதுப்பிரியா-114.

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

எஸ்.சாருஜன்-141, எஸ்.கஜிந்தன்-140, பி.சஞ்சவராம்-115, வி.செலன்கீர்த்தனா-115, என். தனுஷாந்த்-128, ஜே.டிஸ்மன்-124, ஜே.தேவராஜ்-127, என்.ஜீவபிரகாஸ்-120, பி.காந்தரூபன்-123, கே. கௌரீசன்-116, வை.கோகுலதீபன்-119, ரி.சொரூபன்-116, யு.பிரியலக்சன்-131, கே.கோபிகன்-136, கே.நிக்சன்-118, இ.கொலின் துஷாந்தன்-122, ரி.கவிதரன்-114, எஸ் .கனிஸ்டலா-120, எஸ். தரணிகா-132, ஜே.ஜெஸ்பான்சி-122, யு.கஜித்தா-117, ரி.விதூஷா-116, நிஷாஜா -138, ஜே.சுபஸ்திகா-114.

**கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை**

உ.விதுர்சனா-126.

**ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை**

வி.கீர்த்திகா-150 ,சி.நிலக்ஷன் 150,ஜெ.தக்ஷாயினி-145, இ. தர்சிகா- 142,ப.ரேணுயன்-139, உ.பிரதீப்-133, இ.கலக்சன்-133, ச.நிலக்ஷன்-131,லோ.சஜிபன்-130,அ.சுபின்சன்-127, ந.ஜனுஷன்-125,த.வலக்சன்-125,இ.சுபராஜ்-124,இ.சஞ்சிதா-124 ,கு.சர்விகா-122,க.யதுர்சன்-121,ச.சாரங்கா-120,சி.தனுசியா-119 ,ம.நிதர்ஷன்-119,வ.சித்திராங்கி-116, இ.சிந்துஜன்-115,இ. புருஷோத்தமன்-115, சி.சிவப்பிரசன்னா- 114 , க.கோசலாஜினி-114

**பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்**

சி.துளசியன்-138,பி.சர்மினி-137, கு.கவிதாஸ்-128, சு.ஜசிகாந்தன்-118, அ.அருண்ராஜ்-116, செ. மதனிகா-116. (அ)

# அரச நிறுவனங்களில் நிதிமோசடி; லஞ்ச,ஊழல் ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்க நிறுவனங்களில் ஆயிரத்து ஐந்நூறு கோடி ரூபா நிதி மோசடி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த ஊழல் மோசடிகள் தொடர்பில் விரைவில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என லஞ்ச மற்றும் ஊழல் விசாரணைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு. தேச நிர்மாண அமைச்சு, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு. போன்றஅமைச்சுக்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களில் பாரிய நிதி மோசடி இடம் பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

சில பாரிய அளவிலான அரச நிறுவன நிதி மோசடிகள் தொடர் பில் கோப் கமிட்டி லஞ்ச மற்றும் ஊழல் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டத்திற்கு முரணான வகையில் சொத்துக்களை சேர்த்தல், போலியான முறையில் விலைமனுக் கோரல், லஞ்சம் வழங்குதல் மற்றும் பெற்றுக் கொள்ளுதல், அரசாங்க நிதியை கையாடல் போன்ற பல்வேறு குற்றச் சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப் படவுள்ளது.

இந்த விசாரணைகளின் முடிவுகளின் போது அரசாங்கத்தின் சில முக்கிய அமைச்சர்களுக்கும் இந்த சம்பவங்களுக்கும் தொடர்பு உள்ளதா என்பது குறித்து அம்பலாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

## இரா்சி பலன்

22.09.2008
(புரட்டாதி 6, திங்கட்கிழமை)
அட்டமி முன்னிரவு 11.51மணிவரை
மிருகசீரிடம் பிற்பகல் 3.24 மணிவரை
இராகுகாலம்-7.32-9.02 மணிவரை
சுபநேரம்-12.02-1.32 மணிவரை
மத்தியாஷ்டமி

| | |
|---|---|
| மேடம் | எடுத்த காரியம் கைகூடும் , குடும்ப மகிழ்ச்சி, போசன நன்மை, தனவருவாய். |
| இடபம் | வாக்கு வாதம், முயற்சி தாமதம், பண விரயம், உடல் நலக் குறைவு. |
| மிதுனம் | தெய்வ சிந்தை, பெரியோர் சந்திப்பு, புதிய முயற்சி, போசன நன்மை. |
| கடகம் | பிரயாணம், காரிய அலைச்சல், சுபசெலவு, சயன சுகக் குறைவு. |
| சிங்கம் | கீர்த்தி, காரிய நன்மை, மனமகிழ்ச்சி, தனலாபம். |
| கன்னி | அதிகாரம், நல்லமுயற்சி, போசனசுகம், நண்பர்கள் உதவி. |
| துலாம் | கட்டுப்பாடு, புதிய திட்டமிடல், எதிர்பாராத செலவு, காரிய தாமதம். |
| விருச்சிகம் | மரியாதைக்குறைவு, வீண் பகை, முயற்சிதாமதம், போசன சுகம். |
| தனுசு | உடல் நலம், காரிய நன்மை, தன்னம்பிக்கை, செல்வாக்கு. |
| மகரம் | தொழில் விருத்தி, முயற்சி கைகூடும், ஆரோக்கியம், சுவாரஸ்யம். |
| கும்பம் | வியாபார நன்மை, சிறுவியாதி, கௌரவக்குறைவு, முயற்சி தாமதம். |
| மீனம் | தாய்வழி உறவு, மனச்சஞ்சலம், உடல் நலக்குறைவு, சுப செலவு. |

# ஜீ.எஸ்.பி.பிளஸ் சலுகை இலங்கைக்கு வழங்கக் கூடாது

பிரித்தானியா தெரிவிப்பு-சிங்கள நாளிதழ் தகவல்

இலங்கைக்கு ஜீ.எஸ்.பி.பிளஸ் சலுகைத் திட்டம் வழங்கப்படக் கூடாதெனப் பிரித்தானியா தெரிவித்துள்ளதாகப் பிரபல சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் மனித உரிமைகள் தரம் உரிய முறையில் பேணப்படும் வரையில் ஜீ.எஸ்.பி.சலுகைத் திட்டம் வழங்கப்படக் கூடாதெனப் பிரித்தானியாசுட்டிக் காட்டியுள்ளது.

ஆட்கடத்தல், காணாமல் போதல்கள் மற்றும் படுகொலைச் சம்பவங்கள் மீண்டும் அதிகரித்துள்ளதாகப் பிரித்தானியாவின் பிரதிவெளி விவகார அமைச்சர் மிலோக் பிறவுண் தெரிவித்துள்ளார் என அந்தப் பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# அடுத்த வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு?

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் எதிர்வரும் நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு -செலவுத் திட்டத்தின் மூலம் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி அரசாங்க ஊழியர்களுக்கு1500முதல் 2000ரூபா வரை வரை சம்பள உயர்வு கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தச் சம்பள உயர்வு வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கான கொடுப்பனவுடன் இணைத்து வழங்கப்படும் என மேலும்தெரிய வருகின்றது.

அதன்படி அரசாங்க ஊழியர்களுக்கு தற்போது வாழ்க்கைச் செலவு உதவிக் கொடுப்பனவாக வழங்கப்படும் 3500ரூபா நவம்பர் மாத வரவு செலவுத் திட்டத்தின் பின்னர் ஐயாயிரம் ரூபாவாகவோ 5500 ரூபாவாகவோ அதிகரிக்கப்படும் என மேலும் எதிர் பார்க்கப் படுகிறது.(அ-5)

## நிர்வாகிகள் தெரிவு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் கூட்டம் கடந்த வாரம் நடைபெற்றபோது நடப்பு ஆண்டுக்கான நிர்வாக சபை தெரிவுசெய் யப்பட்டது.

தலைவராக த.சிதம்பரப்பிள்ளையும், செயலாளராக செ.சிவசுப்பிரமணியமும், பொருளாளராக க.சிவசுப்பிரமணியமும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் 4 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (அ-29)

## பொதுக்கூட்டம்

வட்டு.இந்து (நவோதய) கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச்சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் 24 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் திருமதி ஜெ. அருள் மயம் தலைமையில் நடைபெறவுள்ளது. (அ)

## "நெக்டப்" அனுசரணையுடன் பாடசாலைக் கட்டடம்

(மருதங்கேணி)

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் 99 இலட்சம் ரூபா செலவில் நெக்டப் நிறுவனத்தின் அனுசரணையுடன் நூல் நிலையமும், விஞ்ஞான ஆய்வுகூடமும் நிறுவப்படவுள்ளது.

- மேல் மாடிக் கட்டடத்தில் நூல்நிலையமும். கீழ்மாடியில் விஞ்ஞானஆய்வுகூடமும் நிறுவப்படவுள்ளது. (அ-35)

## நிவாரணம் வழங்க மீனவர் விபரம் சேகரிப்பு

(மருதங்கேணி)

அண்மையில் நடைபெற்ற பருத்தித்துறை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கல் சம்பந்தமாக பின்வரும் விபரங்களை உள்ளடக்கிய வாராந்த அறிக்கை (கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக) சமர்ப்பிக்குமாறு கடற்றொழில் பரிசோதகரை பருத்தித்துறை பிரதேச செயலர் கேட்டுக்கொண்டுள்ளார்.

- பருத்தித்துறை பகுதியில் கடற்றொழில் செய்பவர்கள் பற்றிய விபரம்
- பாதுகாப்பு அனுமதி மறுக்கப்பட்ட நாட்களின் விபரங்கள்
- வறுமைக்கோட்டுக் குட்பட்ட மீனவர் விபரம். (அ-35)

## கோழிக்குஞ்சு விநியோகம்

(மருதங்கேணி)

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மூன்று கிராமங்களிலிருந்து தலா 10 பயனாளிகள் வீதம் தெரிவு செய்யப்பட்டு நல்லின கோழிக்குஞ்சுகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

அல்வாய் வடக்கு, புலோலி மேற்கு புலோலி வடகிழக்கு கிராமங்களுக்கே இந் நல்லின கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டன. (அ-35)

## ஆசிரியர்களுக்கான முன்சேவைப் பயிற்சி

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான முன் சேவைப் பயிற்சி இன்று காலை 8மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் ஆரம்பமாக உள்ளதெனவும் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களைத் தவறாது சமூகம் தருமாறும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் கேட்டுள்ளார். (அ-29)

## திறந்த சுவரொட்டி சித்திரப் போட்டி

# தரமான அரச சேவைக்காக மக்களின் உரிமையைப் பாதுகாப்போம்

சர்வதேச ஊழல் ஒழிப்பு தேசியக் குழுவால் ஊழல் ஒழிப்பு சர்வதேச தினத்தை நினைவு கூருவதற்காக பாடசாலை மற்றும் திறந்த மட்டத்திலான சுவரொட்டிப் போட்டியும் கண்காட்சியும் டிசம்பர் மாதம் 9 ஆம்திகதி நடைபெற வுள்ளது. இதற்காக கீழே குறிப்பிட்டுள்ள போட்டி நிபந்தனைகளுக்கமைய சுவரொட்டி சித்திர ஆக்கங்களை ஒக்டோபர் 5ஆம் திகதிக்கு முன் நல்லூர் பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உதவியாளரிடம் ஒப்படைக்குமாறு நல்லூர் பிரதேச செயலர் பா .செந்தில்நந்தனன் கேட்டுள்ளார்.

இதற்கான தொனிப்பொருள் "தரமான அரச சேவைக்காக மக்களின் உரிமையைப் பாதுகாப்போம்" இவற்றுக்கான பொதுவான நிபந்தனைகள் வருமாறு,

- அளவு (17"X22") ஆக இருத்தல் வேண்டுமென்பதுடன் (1/2 அங்குலம் அளவிலான (Margine) இட எல்லைகள் சுவரொட்டி யைச் சுற்றி விடப்பட்டிருத்தல் வேண்டும்.
- இதற்காக GSM-160-200 க்கு இடையிலான பொருத்தமான கடதாசியைப் பயன்படுத்தலாம்.(Art Board, Bristol Board)
- முன்வைக்கப்படும் சுவரொட்டி ஆக்கங்களுக்காக ஏதேனும் வர்ணக் கலவையைப் பயன்படுத்தலாம்.
- மேற்படி தொனிப்பொருளுக்கு ஏற்புடையதான தலைப்புகளை ஆக்கம் செய்து சுவரொட்டியில் உள்ளடக்கலாம். அது 10 சொற்களுக்கு வரையறைப்படுத்தியிருத்தல் வேண்டுமென்பதுடன் எந்தவொரு மொழியிலும்(சிங்களம், தமிழ், ஆங்கிலம்) தெளிவாக இருக்கவேண்டும்.
- எல்லா ஆக்கங்களும் சுய ஆக்கங்கள் என கீழே குறிப்பிட்டுள்ளவாறு உறுதிப்படுத்தல் வேண்டும்.

*பாடசாலை மட்டம்*: -வகுப்பு ஆசிரியர் அதிபர் ஆகியோரின் கையொப்பத்துடன் பாடசாலை முத்திரை.

*திறந்த மட்டம்*:- உரிய பிரிவின் கிராம அலுவலர் /பிரதேச செயலாளர் அல்லது அரசாங்க நிறுவனமொன்றில் பணியாற்றுபவராக இருந்தால் நிறுவனத் தலைவர் மற்றும் அவரு க்கு அடுத்தபடியாக உள்ள பதவி நிலை அலுவலரின் சான்றிதழ் ( உறுதிப்படுத்தலானது சுவரொட்டியின் பின்பக்கத்தின் வலதுபக்க மேல்மூலையில் குறித்தல் வேண்டுமென்பதுடன் உரிய உத்தியோகபூர்வ முத்திரையுடன் இருத்தல் வேண்டும்). (அ)

## யாழ்.செய்திகள்



துன்னாலை கோட்டப்பளை பிட்டிதூவு வீதி வேல்ட் விஷன் நிதி அனுசரணையுடன் துன்னாலை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் புனரமைக்கப்பட்டதை ஒட்டி நடைபெற்ற விழாவில் வேல்ட்விஷன் யாழ். மாவட்ட இணைப்பாளர் ரி.வசந்தநாயகம் உரையாற்றுவதையும், விழாவில் கலந்துகொண்ட மக்களையும் படத்தில் காணலாம்.

## பரு.நவீன சந்தை கட்டட வேலை ஆரம்பம்

(மருதங்கேணி)

பருத்தித்துறை நவீன சந்தைக் கட்டடத் தொகுதி அமைப்பதற்கு மொத்த மதிப்பீட்டுத் தொகை 160 மில்லியன் எனக் கணககிடப் பட்டுள்ளது. இதன் முதலாவது கட்டமாக ரூபா 107 மில்லியன் நெக்டெப் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் முதலில் நவீன சந்தைக் கட்டடத்தின் கீழ் தள வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பருத்தித்துறை பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது. (அ-35)

## பயிற்சி வகுப்பு

(மருதங்கேணி)

நெக்டெப் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை கடற்றொழிலாளர்களுக்கு வெளிஇணைப்பு இயந்திரம் திருத்த வேலைக்கான 30நாட்கள் கொண்ட பயிற்சி வகுப்பு J/403 கிராம சேவை (பருத்தித்துறை) உத்தியோகத்தர்பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அடுத்தகட்ட பயிற்சிவகுப்பு வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இரண்டு கட்டங்களாக இப் பயிற்சி வகுப்பு நடைபெறுமெனவும் பருத்தித்துறை கடற்றொழில் பரிசோதகர் தெரிவித்தார். (அ-35)

## விளையாட்டு விழா

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி தென்மேற்கு பிரதேசசபை நடாத்தும் பிரதேச முன்பள்ளிகளின் விளையாட்டு விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய முன்றலில் திருமதி ம.சுகந்தினி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உள்ளூராட்சி திணைக்கள யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், சிறப்பு விருந்தினர்களாக வலி தென்.மேற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி பு.சிவலிங்கம், வலிகாமம் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.குகனேசன், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கே.சிவசோதி, ஆசிரிய ஆலோசகர் திருமதி ம.அம்பிகைபாகன், உள்ளூராட்சி திணைக்கள மாவட்ட சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வே.கந்தசாமி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (அ)

## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட வண்ணார்பண்ணை பிரதேச வளர்ப்பு நாய்களுக்கான (A.R.V) விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி இன்று திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணிவரை பிறவுண் வீதி 1ஆம் ஒழுங்கையிலும், பிற்பகல் 2மணி முதல் 3.30 மணிவரை பிறவுண் வீதி 2ஆம் ஒழுங்கையிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு இத் தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் கேட்டுக்கொள்கின்றார். (இ)

## கள்ளுத் தவறணையை இடமாற்ற நடவடிக்கை

(மருதங்கேணி)

புலோலி தெற்கு பிரிவிலுள்ள சிங்கநகர் கிராமத்தில் அன்னை மாதா கோவிலுக் கண்மையில் கள்ளுத்தவறணை அமைந்திருப்பதால் சுற்றாடலுக்கு பல்வேறு இடையூறுகள் ஏற்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதெனவும், இதனை மாற்றுவதற்கு பொருத்தமான இடம் கிராம சேவை உத்தியோகத்தரால் இனங்காட்டப்பட்டு இருப்பதனால் இதனை இருவாரங்களுக் குள் மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளு மாறும் பனை தென்னை அபிவிருத்தி சபையை பருத்தித்துறை பிரதேச செயலர் கேட்டுக் கொண்டுள்ளார். (அ-35)

## தென்மராட்சியில் நடமாடும் சேவை

(சாவகச்சேரி)

யாழ். மாவட்ட மேலதிக பதிவாளர் அலுவலகம் தென்மராட்சிப் பிரதேசத்தில் பிறப்பு. இறப்பு, விவாகம் தொடர்பான காலம் கடந்த பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்.


தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நடாத்தப்படவுள்ள இந்த நடமாடும் சேவையில் பங்குபற்ற உள்ள மக்களுக்கு ஆரம்ப கட்டசேவை வழங்குவதற்கு தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இச் சேவையில் பயன்பெற விரும்பும் பொதுமக்கள் தென்மராட்சிப் பிரதேச பதிவாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சேவையின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் தெரிவித்துள்ளார். (அ-29)



கரையோரப் பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பொருட்டு அவர்களுக்கு வழங்குவதற்கென வேல்ட் விஷன் அனுசரணையுடனும் யாழ்.விவசாயத் திணைக்களத்தின் தொழில்நுட்ப அனுசரணையுடனும் கந்தர்மடம், வேதாந்த மடத்தில் உரப்பைகளில் வளர்க்கப்பட்ட மிளகாய், கறிமிளகாய், வெண்டி,கத்தரி நாற்றுக்களின் ஒருபகுதியைப் படங்களில் காண்கிறீர்கள்.

# நோத் முதல் கோபல்லவா வரை (106)



## முதலாம் மகா யுத்த காலம்

அவர்களுக்கு அரசியற் பயிற்சி கிடையாது என்றார். அதனைக் கேட்டு மனம் நொந்த ஆமண்டி சூசா அவர்கள் அத் தலையங்கத்தை அப்படி ஆணித்தரமாக எழுதுவாராயினர்.

"மனிதர் பிழை விடுவது சகஜம். பிழை விட்டுத்தான் காரியங்களைப் பழகலாம் . பிழை விடுதல் மனிதருக்குரியதோர் உரிமை. ஏன் ஆங்கிலேயர் பிழையான அரசாங்கத்தைக் காணவில்லையா? அவர்கள் பாராளுமன்றத்துக்குத் தெரிந்தனுப்பிய பிரதிநிதிகள் யாவரும் உண்மையில் தகுதியானவர் தாமோ? ஆகவே ஒவ்வொரு மனிதனுக்கும் பிழைவிடச் சுதந்திரம் உண்டு" என்று பொருள்பட மிகவும் நயமான தலையங்கத்தை எழுதி ஆள்பதி அவர்களைச் சிந்திக்க வைத்தார்.

முதலாம் மகாயுத்தத்தில் இங்கிலாந்து தீவிரமாக ஈடுபட்ட போது அதன் விசுவாசமுள்ள முடிக்குரிய குடியேற்றம் என்ற முறையில் இலங்கையும் ஜேர்மனியோடு போருக்குப் புறப்பட்டது. இலங்கைச் சட்டசபை எவ்வித எதிர்ப்புமின்றி யுத்தச் செலவுக்கு மானியம் ஒதுக்கியது. அதனுடன் நில்லாது இலங்கை அரசாங்கம் சுதேசிகளிடையே படைதிரட்டிப் பழக்கி ஐரோப்பாவுக்கு அனுப்பியது. மகா முதலியார் பண்டாரநாயக்க அவர்கள் அக்காலத்தில் இங்கிலாந்திலிருந்தாராகையால் அவருடைய மைந்தன் திரு S.W.R.D. பண்டாரநாயக்க தமது யுத்த நன்கொடையைத் தாராளமாக அள்ளிக் கொடுத்து ஆவன செய்தார். யுத்த நெருக்கடிகள் இலங்கையில் ஏற்படாவிட்டாலும் விலைவாசிகள் அதிகமாக ஏறுவனவாயின.

### மீள் பார்வை

படித்த இலங்கையர் தொகுதியின் பிரதிநிதித் தேர்தல் இரண்டாம் முறையாக 1916 ஆம் ஆண்டில் நடைபெற்றபோதும் இராமநாதன் அவர்கள் வேட்பாளராய் முன்நின்றார். அவருக்கு எதிராக நியாயவாதி T.S. ஜெயவர்தனா என்னும் பெரியார் முன்னின்றார். இலங்கை முழுவதிலும் இராமநாதன் அவர்களுக்கே அதிக ஆதரவிருந்தமையால் அவர் இரண்டாம் முறையும் இலங்கைவாழ் மக்களின் ஏகப் பெரும் பிரதிநிதியாகத் தெரியப் பெற்றுச் சட்டசபையை அலங்கரிப்பாராயினார்.

முன்னர் தமிழரின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட பொன் குமாரசுவாமி அவர்களுக்குப் பின் அம்பலவாணர் கனகசபை என்னும் பெரியார் நியமனம் பெற்றார். மக்கலம் திருத்தத்தின் போது தமிழருக்கு மேலும் ஒரு பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டபோது அவ்விடத்துக்குத் திரு J.N. திசைவீரசிங்கம் என்னும் பெரியார் கீழ் மாகாணத்திலிருந்து நியமிக்கப்பட்டார்.

அம்பலவாணர் கனகசபை அவர்கள் இரண்டாம் முறையும் நியமனம் பெற்றதோடு சட்ட நிர்வாக சபையிலும் அங்கத்துவம் வகித்தார். அவருடைய சேவையைக் கௌரவிக்கு முகமாக அரசாங்கம் அவருக்கு நைற் பட்டம் அளித்தது. அவர் 1916 ஆம் ஆண்டில் இறந்தபின் அவருடைய இடத்திற்கு இந்து சாதனம் சபாபதி அவர்கள் நியமனம் பெற்றார். திசைவீரசிங்கம் அவர்களுக்குப் பின் அப்புக்காத்தர் பாலசிங்கம் அவர்கள் நியமனம் பெற்றார்.பாலசிங்கம் அவர்கள், நீதிபதி வைமன் கு.கதிரவேற்பிள்ளை அவர்களின் மைந்தர்.

இந்தியாவிலும் 1917 ஆம் ஆண்டில் சரித்திரப் பிரசித்தி பெற்ற நிகழ்ச்சிகள் ஒன்றன் பின் ஒன்றாக நடைபெறலாயின. முதலாவது மகாயுத்தத்தின் காரணமாக இந்தியாவில் ஏற்பட்ட பல நடைமுறைகளை நாட்டு மக்கள் தீவிரமாக எதிர்த்தனர். அன்னி பெசண்ட் அம்மையாரின் சுதந்திர ஆட்சி இயக்கம் வலுப்பெற்றது. தேசிய உறவு முறைகள் தீவிரமாக உறுதிப்படுத்தப்படலாயிற்று.

எட்விட் மொன்ராகு என்பார் இந்திய மந்திரியாகப் பதவியேற்றதும் அவர் இந்தியாவுக்குத் தம்மாலான நன்மைகளைச் செய்வதற்குத் திட்டமமைப்பாராயினர். அவர் கெம்ஸ்போட் பிரபுவுடன் சேர்ந்து இந்தியாவெங்கும் சுற்றிப் பார்த்து நிலைமைகளை அறிந்தார். அவர் இந்தியாவிலுள்ள சேலத்தில் விஜயராகவாச்சாரியார் என்ற பெரியாருடன் கலந்து பேசியபோது விஜயராகவாச்சாரியார் கூறிய அரசியற் கோட்பாடுகளையும் கேட்டார். "மாகாண சுயவாட்சி எமக்குத் தேவையில்லை. எமக்கு இந்தியா முழுவதிலும் ஒற்றையாட்சியே தேவை" என்று ஆச்சாரியார் கூறியதோடு இந்திய அரசாங்கத்தில் இலங்கையும் இணைக்கப்பட வேண்டும் என்ற கருத்தையும் தெரிவித்தார்.

மொன்ராகு அவர்கள் இங்கிலாந்துக்கு மீண்டபின் 1918 ஆம் ஆண்டு யூன் மாதமளவில் அவருடைய அறிக்கை வெளியிடப்பட்டது. அதிலே இந்தியாவின் சுயவாட்சிக்கு அடிகோலும் அமைப்புக்கள் எதுவும் இன்றி வெறும் சட்டசபைத் திருத்தங்களுக்கான வழிகளே கூறப்பட்டதை இந்தியர் வெறுத்தனர். அவர்கள் சுயராச்சியப் பாதையில் கிளர்ச்சி செய்ய முனைந்தபோது இந்திய அரசாங்கம் அடக்குமுறைகளைக் கையாண்டது.

**க.சி.குலரத்தினம்**

பஞ்சாப் மாகாணத்தில் கல்நெஞ்சனான சேர்.மைக்கல் ஓ டையர் என்பானின் கொடுங்கோலாட்சியில் 13.4.1919 இல் வருடப் பிறப்பின்போது 20ஆயிரம் மக்கள் மத்தியில் துப்பாக்கிப் பிரயோகத்தால் ஐந்நூறு பேர் இறந்தும் ஆயிரக்கணக்கானோர் காயமுற்றும் போனதால் நாட்டில் கொந்தளிப்பு ஏற்படலாயிற்று. (தொடரும்)



வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தின் (NEHRP) சுற்றுச் சூழல் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கமநல அபிவிருத்தித் திணைக்கள அனுசரணையுடன் , தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளிடையே கலப்பினத் தென்னை நாற்றுக்கள் விநியோகிக்கும் அங்குரார்பண நிகழ்வு அண்மையில் புத்தூர் கமநல அபிவிருத்தித் திணைக்கள நிலைய கேட்போர்கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.இந்நிகழ்வை யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ். வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாண திட்டத்தின் திட்டப் பணிப்பாளர் செ.பத்மநாதன் ஆகியோர் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் .பயனாளி ஒருவருக்கு தென்னை நாற்று வழங்கப்படுவதையும் மற்றும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# தொல்லியல் நோக்கில் (12)

# கந்தரோடையும் கதிரமலையும்

கி.பி 1ஆம் நூற்றாண்டின் பின்னர் இலங்கை–தமிழக அரசியல் உறவில் சிறிய மாறுதல் ஏற்பட்டதைப் பாளி இலக்கியங்கள் கூறுகின்றன. இக்காலத்திலிருந்து முன்னோரைப் போல் தமிழர் படையெடுத்து வந்து இலங்கையில் அரசுரிமையை இழந்த மன்னர்கள் மற்றும் அரச வம்சத்தினர் சிலர் தமிழ்நாடு சென்று தமிழர் படையுடன் வந்து



கந்தரோடையில கிடைத்த மட்பாண்டம் (நன்றி செ.கிருஷ்ணராஜா)

மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும் நிலை காணப்படுகிறது. இலம்பகர்ண மன்னனால் சிறையில் அடைக்கப்பட்ட இளநாக என்பவன் அங்கிருந்து தப்பி மறுகரைக்குச் சென்று 3ஆண்டுகளின் பின்னர் பெரும்படையுடன் வந்து ஆட்சியைக் கைப்பற்றி 6 வருடங்கள் (கி.பி 38–44) ஆட்சிபுரிந்தான். இவனுடைய மனைவி தமிழ்ப்பெண் என்பது தெரியவருகிறது.

மேற்கூறப்பட்ட செய்திகளிலிருந்து கிறிஸ்தவ சகாப்தத்தின் முதல் 250 ஆண்டு காலப் பகுதியில் ஆட்சிபுரிந்த 20 மன்னர் களுள் 10 பேர் தமிழ் மன்னர்கள் என்பதும், அவர்கள் 80 ஆண்டுகளுக்கு மேல் அனுராதபுரத்தில் ஆட்சி புரிந்துள்ளனர் என்பதும் தெரிகிறது.

இத்தமிழ் மன்னர்களைப் பாளி இலக்கியங்கள் சோழ நாட்டவர், அக்கரையில் இருந்து வந்தவர்கள்,வர்த்தகர்களின் பிள்ளைகள், சுதேச பட்டத்தரசிகளின் கள்ளக் காதலர்கள் எனக் கூறுகின்றன. இக் கூற்றுக்களை ஆராய்ந்த பிற்கால வரலாற்றாசிரியர்கள் இவர்கள் அனைவரும் அவ்வப்போது தமிழ் நாட்டிலிருந்து வந்து ஆட்சியைக் கைப்பற்றிய அன்னியர் என விளக்கம் கொடுத்தனர். இதன்மூலம் பண்டைய காலத்தில் சுதேச அரசமரபு தோன்றவில்லை என்பதற்கு அப்பால் தமிழர்கள் இந் நாட்டுக்கு அன்னியமானவர்கள் என்ற கருத்தும் வெளிப்படுத்தப்படுகிறது.

இக் கருத்துக்கள் மேற்கூறப்பட்ட தமிழ் மன்னர்களை தமிழ்நாட்டோடு தொடர்புபடுத்திக் கூறினாலும் காதலையும் வீரத்தையும் போற்றிப் பாடும் சமகாலச் சங்க இலக்கியம், தமிழ்நாட்டு அரச வம்சத்தினரோ அல்லது தனிப்பட்டவர்களோ இலங்கை மீது படையெடுத்து ஆட்சியைக் கைப்பற்றியது பற்றி எதுவுமே கூறவில்லை. இமயம் வரை படையெடுத்துச் சென்ற மன்னர்கள் அதன் வெற்றியின் நினைவாகக் கல்எடுத்து வந்து தமிழ்நாட்டில் கண்ணகிக்குச் சிலை வடித்ததாகப் பெருமைப்படும் சங்க இலக்கியம் மிக அண்மையில் இருந்த இலங்கையின் வெற்றி பற்றி ஏன் மௌனம் சாதிக்கிறது என்பது புரியவில்லை. அதேவேளை இலங்கையுடனான வர்த்தக, பண்பாட்டு உறவுகள் பற்றி அரிதாகக் கூறும் சங்க இலக்கியமும், சமகாலப் பிராமிக் கல்வெட்டுக்களும் இலங்கையுடன் இருந்திருக்கக் கூடிய நீண்டகால அரசியல் உறவை மட்டும் ஏன் கூறாதுவிட்டன என்பதும் புரியாத புதிராக உள்ளன. இதனால் இக் காலத்தில் இலங்கைக்கும் தமிழகத்துக்குமிடையே அரசியல் உறவு இருக்கவில்லையென அர்த்தம் கொள்ளமுடியாது. ஆனால் அரச உருவாக்கத்திற்கு முந்திய இரு நாடுகளுக்குமிடையிலான உறவையும், ஒருமைப்பாட்டையும் இரு நாடுகளுக்கிடையிலான தனித்துவத்தையும் புறக்கணித்த நிலையில் அரசியல் உறவைத் தமிழகத்துடன் மட்டும் அழுத்திக் கூறுவதே பொருத்தமாகத் தோன்றவில்லை. மாறாக இலங்கையில் வாழ்ந்த தமிழர்களுடன் அனுராதபுரத்தில் ஆட்சி புரிந்த தமிழ் மன்னர்களைத் தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டும். அவ்வாறு பார்க்கப் பல காரணங்கள் சாதகமாக உள்ளன.

அனுராதபுரத்தில் தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்த காலகட்ட தமிழக அரசியல் வரலாற்றை நோக்கும்போது அக்காலத்தில் தமிழ் நாட்டின் இயற்கை எல்லையைத் தாண்டி இன்னொரு நாட்டின்மீது படையெடுக்கும் அளவிற்கு தமிழ் நாட்டில் அரச உருவாக்கம் ஏற்பட்டிருந்ததற்குச் சான்றுகள் காணப்படவில்லை. மாறாக இனக்குழு நிலையிலிருந்து அரசு தோன்றுவதற்கு இடைக்கட்டமாக இருந்த தலைவர்களின் ஆட்சியும் சேர,சோழ, பாண்டிய சிற்றரசுகளின் ஆட்சியுமே காணப் பட்டன.

ஏழறத்தாழ இதையொத்த அரச உருவாக்க நிலையே சமகாலத்தில் இலங்கையிலும் இருந்ததைப் பாளி இலக்கியங்கள், பிராமிக் கல்வெட்டுக்கள், நாணயங்கள் என்பவற்றிலிருந்து அறியமுடிகின்றது. மேலும் இலங்கையில் ஆட்சிபுரிந்த தமிழ் மன்னர்களுக்குரிய பெயர்கள் பலவும் சங்க இலக்கியம், பிராமி கல்வெட்டுக்கள் என்பவற்றில் வரும் பெயர்களிலிருந்து வேறுபட்டவையாக உள்ளன.

அதேவேளை அப் பெயர் கள் இலங்கையில் நன்கு பரிச்சயமானவை என்பதை கல்வெட்டுக்கள், நாணயங்களி லிருந்து அறியமுடிகின்றது. சங்க காலத்தில் தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடையே இருந்த அரசியல், வர்த்தக, பண்பாட்டுத் தொடர்பு காரணமாக மூவேந்தரும் குறுநில மன்னர்களும் வெளியிட்ட நாணயங்கள் இலங்கையிலும் புழக்கத்திலிருந்துள்ளன. ஆனால் தமிழகத்தில் பரவலாகக் கிடைத்த இந் நாணயங்கள் இலங்கையில் கந்தரோடை, பூநகரி, அனுராதபுரம் போன்ற இடங்களில் அரிதாக கிடைத்துள்ளன. (Codrington 1924, seyone 1998, Krishnamurthy 1997, சிவசாமி 1974, புஷ்பரட்ணம் 1993, கிருஷ்ணராஜா1998) .

இவற்றில் சதுரவடிவில் முன்புறத்தில் யானை, குதிரை, காளை,வேலியிடப்பட்ட மரம், மலை,கூரைக்கோயில் போன்ற சின்னங்களையும், பின்புறத்தில் அரச வம்சங்களுக்குரிய குலச்சின்னங்களும் இடம்பெற்றுள்ளன. இதில் பாண்டியருக்கு மீனும், சோழருக்கு புலியும், சேரருக்கு அம்புவில்லும், மலையமான் மன்னர்களுக்கு ஆற்றுச் சின்னமும் அவர்களின் குலச்சின்னமாக இடம் பெற்றுள்ளன.ஏறத்தாழ இதேவடிவு டைய நான்கு வகையான நாணயங்கள் எண்ணிக்கையில் அதிகமாக வடஇலங்கை யில் கந்தரோடை, வல்லிபுரம்,பூநகரி, தென்னிலங்கையில் அக்குறுகொட போன்ற இடங்களில்கிடைத்துள்ளன. அவற்றில்காளைஉருவம் பொறித்த நாணயத்தைத்தை மட்டும் உதாரணத்துக்கு எடுத்து நோக்கலாம்.(தொடரும்)

**வரலாற்றுத் துறைப் பேராசிரியர்**
**ப. புஷ்பரட்ணம்**

# பாகிஸ்தான் ஹோட்டலில் கார்குண்டு தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 68 ஆக உயர்வு

## இலங்கைத் தூதரகமும் பலத்த சேதம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் ஹோட்டலில் கார் குண்டு தாக்குதலில் பலியானவர்கள் எண்ணிக்கை 68 ஆக உயர்ந்துள்ளது.

250 பேர் காயம் அடைந்துள்ளனர். ஹோட்டலில் எரியும் தீ யை அணைக்க தொடர்ந்து போராடுகிறார்கள்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் உள்ள மாரியட் என்ற 5 நட்சத்திர ஹோட்டல் மீது நேற்று முன்தினம் இரவு தீவிரவாதிகள் கார் குண்டு தாக்குதுல் நடத்தினார்கள். ஆயிரம் கிலோ வெடி மருந்துகளை ஏற்றிய அந்த கார் மோதி வெடித்ததில் ஹோட்டலின் வரவேற்பு அறை உள்பட பல பகுதிகள் இடிந்து விழுந்தன. 290 அறைகள் கொண்ட அந்த ஹோட்டல் தீப்பிடித்து எரிந்தது.

பிரதமர் கிலானி அலுவலகம் அருகே தான் இந்த நட்சத்திர ஹோட்டல் உள்ளது. இந்த கார் குண்டு தாக்குதலில் ரம்ழான் நோன்பு முடித்து விருந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தவர்கள், வெளி நாட்டு சுற்றுலா பயணிகள், அதிகாரிகள் பலியானார்கள். பலியானவர்கள் எண்ணிக்கை 68 ஆக உயர்ந்துள்ளது. 250 பேர் காயமடைந்துள்ளனர்.

கார் குண்டு தாக்குதல் நடந்தபோது அந்த ஹோட்டலில் 200க்கும் மேற்பட்டவர்கள் தங்கி இருந்தனர். காயம் அடைந்தவர்களில் டென்மார்க் நாட்டு தூதர் உடல் நிலை கவலைகிடமாகவுள்ளது.



கார்குண்டுகள் வெடித்ததில் அந்தபகுதி முழுவதும் அதிர்ந்தது. பல கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள கட்டடங்கள் குலுங்கின. ஜன்னல் கண்ணாடிகள் நொறுங்கின. ஹோட்டல் அருகே நிறுத்தப்பட்டு இருந்த கார்கள் தீப் பிடித்து எரிந்தன.

இந்த ஹோட்டல் அருகே இலங்கை தூதர் அலுவலகம் அமைந்துள்ளது. அந்த அலுவலகமும் பலத்த சேதம் அடைந்தது.

ஹோட்டல் அருகே எண்ணெய் குழாய் செல்வதால் ஹோட்டலில் தீ விடிய விடிய எரிந்தது. தீயை முழுமையாக அணைக்க தீயணைப்பு படையினர் இன்னமும்போராடி வருகிறார்கள்.பாகிஸ்தான் பாராளுமன்றத்தை குறி வைத்து தாக்குதல் நடத்த திட்டமிட்டு இருந்தனர். ஆனால் உளவுத் துறை கொடுத்த தகவலின் பேரில் பாராளுமன்றத்தில் பாதுகாப்பு அதிகரிப்பால்தீவிர வாதிகள் தங்கள் பார்வையை நட்சத்திர ஹோட்டல் மீது திருப்பி விட்டனர். தாக்குதல் நடப்பதற்கு சில மணி நேரத்துக்கு முன்புதான் பாராளுமன்றத்தில் அதிபர் சர்தாரி தீவிராத்தை ஒழித்துக் கட்டுவோம் என்று சபதம் செய்தார்.

தலிபான் மற்றும் அல் கொய்தா தீவிர வாதிகள் தான் இந்ததாக்கு தலை நடத்தியதாகவும் பாகிஸ்தான் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

இந்த தாக்குதலுக்கு அமெரிக்க அதிபர் புஷ், இங்கிலாந்துபிரதமர் கோர்டன் பிறவுண் ஆகியோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். (அ-5)

# பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு மலேசியப்பிரதமருக்கு அழைப்பு

## நம்பிக்கை இல்லாத தீர்மானம் கொண்டு வர முடிபு

(கோலாலம்பூர்)

மலேசிய எதிர்க்கட்சித் தலைவர் அன்வர் இப்ராஹிம் அந்நாட்டுப் பிரதமர் தாதுக் அப்துல்லாஹ் அஹ்மட் படாவிக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் ஒன்றை கொண்டுவரும் முகமாக நாளை செவ்வாய்க்கிழமைக்குள் பாராளுமன்றத்தை கூட்ட அழைப்பு விடுத்துள்ளார்.

அன்வர் இப்ராஹிம்முக்கு எதிரான தன்னினசேர்க்கை குற்றச்சாட்டு விசாரணை நாளை மறுதினம் புதன்கிழமை இடம்பெறவுள்ள நிலையில் அதற்கு முன்பாக மேற்படி பாராளுமன்றக்கூட்டத்தொடரை கூட்ட அவர் அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



பிரதமர் அப்துல்லாஹ் படாவி , அன்வர் இப்ராஹிமின் கோரிக்கைக்கு மறுப்புத் தெரிவித்துள்ளார்.

அதிகாரத்தை சுமுகமான முறையில் கையளித்துவிட்டு விலகிச் செல்லுமாறு ஏற்கனவே பிரதமருக்கு அன்வர் இப்ராஹிம் எழுத்து மூல கோரிக்கை விடுத்து , அதற்கான காலக்கெடுவை கடந்த 16ஆம் திகதி வரை விதித்திருந்தார்.

இந்நிலையில் , அப்துல்லாஹ் படாவி , தனக்கு எதிராக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளைக் கருத்தில் கொண்டு உள்நாட்டு பாதுகாப்புச் சட்டத்தை எவருக்கு எதிராகவும் பயன்படுத்த தான் திட்டமிடவில்லை என கூறினார். (அ-6)

## நடிகர் வடிவேலு வீடுமீது மர்ம நபர்கள் தாக்குதல்

(சென்னை)

சென்னையில் நடிகர் வடிவேலு வீட்டின் மீது சில மர்ம நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

சென்னை சாலி கிராமத்தில் உள்ள நடிகர் வடிவேலுவின் வீடு மற்றும் அலுவலகங்கள் தாக்கப்பட்டுள்ளன.

இதற்கு தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தின் ஆதரவாளர்கள் தான் காரணம் என பொலிசில் புகார் செய்யப்பட்டுள் ளது.

இது தொடர்பாக பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். (அ)

# சீன இரவு விடுதியில் தீ 43 பேர் கருகிச் சாவு

(பீஜிங்)

சீன இரவு விடுதி ஒன்றில் ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் களை கட்டிக்கொண்டிருந்தது. ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் நள்ளிரவு நேரத்தில் இந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.சிலர் மது மயக்கத்தில் இருந்தனர்.

இளம் ஜோடிகள் தங்களை மறந்து நடனம் ஆடிக்கொண்டிருந்தனர். பட்டாசு வெடிக்கப்பட்டது. அப்போது அந்த மூன்று மாடி விடுதியில் திடீர் என்று தீப் பிடித்துக் கொண்டது. தீ மள மளவென்று பரவியது கும்மாளம் போட்டுக்கொண்டிருந்தவர்கள் தீயில் சிக்கிக் கொண்டனர்.

தீ அணைப்புப்படையினர் விரைந்து வந்தனர். உள்ளே சிக்கிக்கொண்டவர்கள் தங்களைக் காப்பாற்றும் படி கூக்குரல் எழுப் பினார்கள். தீ அணைப்புப்படையினர் ஜன்னல்களை உடைத்துக்கொண்டு உள்ளே சென்று அவர்களைக் காப்பாற்றினார்கள்.

ஆனாலும் தீயில் உடல் கருகியும் புகையால் மூச்சுத் திணறியும் 43பேர் பலியாகிவிட்டனர். 50ற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். பட்டாசு வெடித்ததால்தான் தீ விபத்து ஏற்பட்டது என்று விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ-5)

# தென்னாபிரிக்க அதிபர் தாபோ ம்பெகி அதிபர் பதவியிலிருந்து விலகவுள்ளார்?

தென்னாபிரிக்க அதிபர் தாபோ ம்பெகி தனதுகட்சியான ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அதிபர் பதவியிலிருந்து விலகுவார் என்ற தெரிவிக்கப்படுகிறது.

தனது அரசியல் போட்டியாளரான கட்சித் தலைவர் ஜேக்கப் ஸுமாவுக்கு எதிரான ஊழல் வழக்கில் ம்பெகி தலையிட்டதாக குற்றச்சாட்டுகள் எழுந்ததையிட்டு ஜேக்கப் ஸுமா பதவி விலக வேண்டும் என்று அக் கட்சியின் மூத்த பிரமுகர்களுடைய சந்திப்பொன்றில் கோரப்பட்டிருந்தது.

அடுத்த கட்ட நவடிக்கைகளைத் தீர்மானிக்கிற ஒரு நாடாளுமன்ற நடவடிக்கைக்கு ஒத்துழைக்க அதிபர் ம்பெகி தீர்மானித்துள்ளார்.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி மற்றும் தென்னாபிரிக்காவில் ஸ்திரத்தன்மையைப் பேணும் முகமாக அதிபர் நடந்துகொள்ள வேண்டும் என கட்சி உத்தரவிட்டுள்ளதாக அக் கட்சியின் தலைமைச் செயலர் கூறியுள்ளார். (அ-5)

## செய்தித் துளிகள்

### ஸ்பெயினில் கார் குண்டுவெடிப்பு

(மாட்ரிட்)

ஸ்பெயின் வடக்குப் பகுதியில் உள்ள பாஸ்க் பகுதியின் முக்கிய பகுதியான விட்டோரியாவில் நேற்று அதிகாலை நேரத்தில் கார்க் குண்டு வெடிப்பை தீவிரவாதிகள் நடத்தினர்.

அதிர்ஷ்டவசமாக இந்த தாக்குதலில் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. இதனையடுத்து அங்கு பெரும் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

கார்க்குண்டுவெடிப்பு இலங்கை நேரப்படி அதிகாலை 3.30 மணியளவில் நிகழ்ந்துள்ளது. அதிகாலை நேரத்தில் சம்பவம் நடந்துள்ளதால் அங்கு பெரும் பரபரப்பு நிலவி வருகிறது. (அ)

### வெள்ளப்பெருக்கால் மேற்கு நேபாளத்தில் 21 பேர் பலி

(காத்மண்ட்)

நேபாளத்தில் ஏற்பட்டிருக்கும் வெள்ளப் பாதிப்பில் 21 பேர் பலியாகியுள்ளனர். மேலும் ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்து பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேபாளத்தின் மேற்குப்பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கால் சுமார் 4 மாவட்டங்கள் நீரில் மூழ்கியுள்ளன. இதில் 12 பேரைக் காணவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுமார் மூவாயிரத்து 500 குடும்பங்க ளைச் சேர்ந்தவர்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த வெள்ளத்தில் 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மீட்புப்பணிகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன. மேலும் நிவாரணப்பணிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.(அ-5)

### ஜப்பானில் மிதமான நில நடுக்கம்

(டோக்கியோ)

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் மிதமான நில நடுக்கம் உணரப்பட்டது.

இது ரிக்டர் அள்வுகோலில் 4.8 ஆக பதிவாகியிருந்தது. நிலைநடுக்கம் சிபா பகுதியை மையமாகக்கொண்டு ஏற்பட்டதாக நிலவியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.இலங்கை நேரப்படி அதிகாலை 3.47 மணியளவில் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது.

சுனாமி பீதி தேவையில்லை என்று மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ-5)

### லொறி வீட்டினுள் புகுந்து 11 பேர் பலி-ஈரோடில் சம்பவம்

(ஈரோடு)

ஈரோடு அருகே லொறி வீட்டினுள் புகுந்து வீட்டில் இருந்த 11 பேர் பலியாகினார்.

ஈரோட்டில் கொடுமுடி அருகே காசிப் பாளையம் பகுதியில் சென்ற லொறி கட்டுப்பாட்டை இழந்து சாலை யோரவீட்டிற்குள் புகுந்தது.

இதில் வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த 11 பேர் பலியாகினர்.

இச்சம்பவம் இப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (அ-5)

### உத்திரப்பிரதேசத்தில் 54 பேர் பலி

(லக்னோ)


உத்திரப்பிரதேச மாநிலத்தில் தொடர்ந்து பெய்துவரும் பலத்த மழையில் ஏராளமான வீடுகள் இடிந்து மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

மழையினால் இதுவரை 54 பேர் பலியாகினர். மேற்கு மற்றும் மத்திய உத்திரப்பிரதேச மாநிலப்பகுதிகளில் கடந்த இரண்டு நாளாக தொடர் மழை பெய்து வருகிறது. இதில் ஏராளமான வீடுகள் இடிந்து விழுந்தன.

சீதாப்பூர் மாவட்டத்தில் சுவர் இடிந்து விழுந்த சம்பவங்களில் 44 பேர் பலியாகினர். இதன் பக்கத்து மாவட்டமான பாரபங்கியில் 8பேரும் மேற்குப்பகுதியில் உள்ள முசாபர்நகர் மாவட்டத்தில் இரண்டுபேரும் பலியாகினர்.

தொடர் மழையினால் சாலைப்போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது. பல இடங்களில் தகவல் தொடர்பும் துண்டிக் கப்பட்டுள்ளது. (அ-5)

# ஆசிய மாணவர்களை அழைக்கிறது கங்காரு தேசம்!



அயல்நாட்டில் கல்வி பயில விரும்பும் மாணவர்களின் விருப்பத்திற்குரிய தேர்வாக அவுஸ்திரேலியா மிக வேகமாக மாறி வருகிறது. அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய நாடுகளில் கல்வி பயில அதிக ஆர்வம் காட்டி வந்த ஆசிய மாணவர்கள், தற்போது அவுஸ்திரேலியாவை தங்களின் கல்வி பயிலும் இடமாக தேர்ந்தெடுத்து வருகின்றனர். தரத்தில் உறுதியாக இருக்கும் அவுஸ்திரேலிய பல்கலைக்கழகங்கள், சர்வதேச பார்வையுடன் கூடிய கல்வியை பன்முக கலாசார சூழலில் அளிக்கின்றன. பிறவளர்ந்த நாடுகளை விட அவுஸ்திரேலியா, கல்வித் துறையில் பன்மடங்கு வேகமாக வளர்ந்து வருகிறது.

ஹொஸ்பிட்டாலிட்டி, மனேஜ்மென்ட், இன்ஜினியரிங் துறைகளில் பல்வேறு விதமான படிப்புகளை வழங்குவதால், அவுஸ்திரேலிய பல்கலைக்கழகங்களை தேர்வு செய்யும் மாணவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அத்துடன் அந் நாட்டின் பொருளாதாரமும் பலமாக இருக்கிறது. அதனால், இங்கு படிக்கும் அயல்நாட்டு மாணவர்களுக்கு நல்ல ஊதியத்துடன் வேலை கிடைத்துவிடுகிறது. அத்துடன், சொந்த தேவைகளை பூர்த்தி செய்வதற்கு வசதியாக மாணவர்களுக்கு பகுதிநேர வேலை வாய்ப்புக்களும் அதிகம் கிடைக்கின்றன.

### படிப்புகள்

பவர் மற்றும் எனர்ஜி இன்ஜினியரிங் துறையில் சிறப்பான கட்டமைப்பு வசதிகளை அவுஸ்திரேலிய பல்கலைக்கழகங்கள் கொண்டுள்ளன. திறமையான மற்றும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள், பாடங்களை கற்பிக்கின்றனர். லொஜிஸ்டிக்ஸ், சப்ளை செயின் இன்ஜினியரிங் போன்ற முக்கியமான பாடங்கள் , பொறியியல் மாணவர்களுக்கு கற்பிக்கப்படுகின்றன.

### தகவல் தொழில்நுட்பம்

அவுஸ்திரேலியாவில் தகவல் தொழில் நுட்ப துறையில் ஏற்பட்டுள்ள அபரிமிதமான வளர்ச்சி காரணமாக,தகவல் தொழில்நுட்பம் தொடர்பான படிப்புகளை தேர்வு செய்யும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இப் படிப்பை முடித்தவுடன் வேலை கிடைத்து விடுவதால், தகவல் தொழில்நுட்ப பிரிவுகளில் சேர்வதில் போட்டா போட்டி காணப்படுகிறது.

### முகாமைத்துவம்

வரலாற்று ரீதியாகவும், பூகோள ரீதியாகவும் தனித்துவமிக்க நாடாக திகழும் அவுஸ்திரேலியாவில் மூன்று விதமான அணுகு முறைகளின் அடிப்படையில் முகாமைத்துவ பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. ஆசிய பாரம்பரியத்துடன் ஐரோப்பிய (குறிப்பாக பிரிட்டன் பல்கலைக்கழகங்களின் அணுகு முறை) மற்றும் அமெரிக்க பாணியில் முகாமைத்துவக் கல்வி அளிக்கப்படுகிறது. பெரும்பாலான பல்கலைக்கழகங்கள்,நவீன ரீடெயில் முகாமைத்துவ பட்டங்களை அளிக்கின்றன.

அதேபோல், வடிவமைப்பு மற்றும் கலை, தொடர்பாடல், விளையாட்டு மற்றும் ரெக்ரியேஷன், கம்யூனிட்டி சேர்வீஸ் மற்றும் ஹெல்த், டூரிசம் மற்றும் ஹொஸ்பிட்டாலிட்டி, ஹார்ட்டிக்கல்சர், நில முகாமைத்துவம் போன்ற படிப்புகள், அவுஸ்திரேலிய பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் அளிக்கப்படுகின்றன. இதற்கு ஊக்கத் தொகைகளும் வழங்கப் படுகின்றன.

### தகுதி

அவுஸ்திரேலிய மாணவர் விசா பெறுவதற்கு ஆங்கில அறிவு மிகவும் அவசியமாகும். அவுஸ்திரேலிய குடியுரிமை மற்றும் குடியேற்றத்துறை, விசா பெறுவதற்கு ஐ.இ.எல்.டி.எஸ், தேர்வு ஒன்றை மட்டுமே ஏற்றுக் கொள்கிறது.எனினும், படிப்புகளில் அனுமதிப்பதற்கு, பல்வேறு கல்வி நிறுவனங்கள் சொந்தமாக ஆங்கில அறிவு விதிமுறைகளை வகுத்துக்கொண்டுள்ளன. இருந்த போதிலும், ஐ.இ.எல்.டி.எஸ், தேர்வில் பெறும் மதிப்பெண்களும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. அதனால், மாணவர்கள் எந்தக் கல்வி நிறுவனங்களில் சேர விரும்புகிறார்களோ? அந்தக் கல்வி நிறுவனங்களில் சேர்வதற்கு எந்தவிதமான விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன என்பதை தெரிந்துகொள்ளவேண்டும்.

அவுஸ்திரேலியாவில் இளநிலைப் பட்டம் பெற,அவுஸ்திரேலியாவில் 12 ஆம் வகுப்பு முடித்ததற்கான சான்றிதழ் அல்லது அயல் நாட்டில் அதற்கு இணையான படிப்பைப் பூர்த்தி செய்ததற்கான சான்றிதழ் தேவைப் படுகிறது. சில இளநிலை பட்ட வகுப்புகளில் சேர்வதற்கு,குறிப்பிட்ட பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்.

### முதுநிலைப் பட்டம்

குறைந்தபட்சம் ஏதாவது ஒரு இள நிலைப் பட்டத்தில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். சில கல்வி நிறுவனங்கள், பாடப்பிரிவுகளை பொறுத்து. ஆய்வு திறமை அல்லது பணி அனுபவத்தை கோருகின்றன.


இளநிலை மற்றும் முதுநிலை பட்டங்களில் சேர்வதற்கு குறைந்தபட்சம் ஐ.இ.எல்.டி.எஸ்சி. ல் 6 புள்ளிகள் அல்லது 5 புள்ளிகள் மற்றும் 30 வார ELISCO- விற்கு முன்னுரிமை. வொக்கேஷனல் பாடப் பிரிவுகளில் சேர்வதற்கு ஐ.இ.எல்.டி.எஸ்சி. ல் 5.5 புள்ளிகள் அல்லது 5 புள்ளிகளுடன் 20 வார ELISCO விற்கு முன்னுரிமை.


அவுஸ்திரேலியாவின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களுள் சில:


- *AUSTRALIAN NATIONAL UNIVERSITY*
- *UNIVERSITY OF MELBOURNE*
- *UNIVERSITY OF SIDNEY*
- *UNIVERSITY OF QUEENSLAND*
- *UNIVERSITY OF WESTERN AUSTRALIA*

**ஆர்.யூ.பாலமுருகன்**









# இணையத்தில் கிடைக்கும்

## இலவச பேர்னிங் புரோகிராம்கள்


தற்போதைய காலகட்டத்தில் யு.எஸ்.பி., பிளாஷ் டிரைவ், போர்ட்டபிள் ஹார்ட் டிரைவ் மற்றும் வேறு சில பேக்கப் சாதனங்கள் புழக்கத்தில் இருந்தாலும், CD மீடியா இன்னும் தொடர்ந்து பயன்படுத்தப்படும் சாதனமாகவே இருந்து வருகிறது. நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி இதில் பல சிறப்பம்சங்கள். திறனுடன் கூடியதாக வந்துகொண்டே இருக்கின்றன. அதற்கு சிறந்த உதாரணமாக,புளூரேடி CDதயாரிக்கும்நிறுவனங்களை கூறலாம். அதனால், டேட்டர் பதிந்து எடுத்துச் செல்லும் சாதனமாக CD தொடர்ந்து இருந்து கொண்டே தான் இருக்கும்.

CDஎழுதுவதற்கான புரோகிராம்களில் இன்று பலரால் பயன்படுத்தப்படுவது நீரோ புரோகிராமாகும். இதனால் தான் CD டிரைவ் தயாரிக்கும் ஒவ்வொரு நிறுவனமும் , இதனைத் தன் டிரைவ்களுடன் தருகின்றன. இது ஒரு முழுமையான புரோகிராம் தான் என்றாலும், இதன் முழு திறனும் கூடிய பக்கேஜ் வேண்டுமென்றால் பணம் செலுத்தித்தான் வாங்கவேண்டும். அதேநேரத்தில் இணையத்தளத்தல் இலவசமாக பல CDபேர்னிங் (CD Burning) புரோம்கிராம்கள் கிடைக்கின்றன.

### அஷாம்பு சிடி பேர்னிங் (Ashampoo CD Burning)

DVDஎழுதுவதில் அஷாம்பு பல புரோக்கிராம்களை தருகிறது. இவற்றில், பல இலவசம் இல்லையென்றாலும், மிகஆச்சரியாக அண்மையில் இந்த நிறுவனம் தன்னுடைய DVD எழுதும் புரோகிராமை அதன் முழுமை யான திறன்களுடன் இலவசமாக தந்துள் ளது. அனைத்து மீடியாக்களிலும் CD மற்றும் DVD க்களின் அத்தனை வகைகளிலும் எழுதக்கூடிய வகையில் இதன் புரோகிராம் வடிவமைக்கப்பட்டுள்ளது. சுருக்கப்பட்டநிலையில் பேட்டா பக் அப் அமைத்து CDயில் எழுதும் வசதி உள்ளது.

இதற்கு பாஸ்வேர்ட் தரும் வசதியும் இணைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சுருக்கப்பட்டு பதியப்படும் டேட்டா ஒரு CD அல்லது DVD க்கு மேலான அளவில் இருந்தால் அதனை பிரித்து ஒன்றுக்கு மேற்பட்ட CD அல்லதுDVD க்களில் எழுதிக் கொடுக்கும் அருமையான வசதியும் தரப்பட்டுள்ளது. எனவே, இலவசமாக தரப்படும் இத்தகைய புரேகிராம்களில் இது முதலிடம் பெறுகிறது. இதனை http:// www2.ashampoo.com/ web- cache/html/l/product 2 1110 htm என்ற முகவரியில் பெறலாம்.






### CD Burner XP PRO

கிராபிக்ஸ் இன்ப்டேஸ்துணையுடன் இந்தCD பேர்னிங் புரோகிரம் கிடைக்கிறது. CD/DVD யில் டேட்டா எழுத பல வகைகளில் இயங்குகிறது. டேட்டா, ஓடியோ,மல்ட்டிசெஷன் மற்றும் பல பிரிவுகளில் நமக்கு விருப்பமான வகையில் டேட்டா எழுதலாம்.

அத்துடன், ஹெச்.டி/DVD மற்றும் புளூரே CD சப்போர்ட் தரப்பட்டுள்ளது. இதில் கிடைக்கும் இன்னொரு வசதி கவர் பிரிண்டிங்





என்.ஆர்.ஜி.மற்றும் ஐ.எஸ்.ஓ. இமேஜ்களை உருவாக்கும் வசதியும் உள்ளது.

விண்டோஸ் 98 முதல் இன்று வரையிலான அனைத்து ஆப்பரேட்டிங் சிஸ்டம்களிலும் செயல்படுகிறது. ஐ.டி.இ. ,யு.எஸ்.பி.

**இவ்வார இணையத்தளம்**

பயர்வயர் மற்றும் ஸ்கஸ்ஸி டிரைவ்களுடன் இணைந்து செயல்படுகிறது. மிக மிகக் குறைந்த மெமறியை பயன்படுத்துகிறது. இதனை http://cdburnerxp.se/download.php என்ற முகவரியில் உள்ள தளத்திலிருந்து டவுண்லோட் செய்து கொள்ளலாம்.





### Deep Burner

பலரும் நன்றாக அறிந்த இன்னொரு சிடி பேர்னிங் சொப்ட்வெயர் டீப் பேர்னர் ஆகும். CD/DVD பேர்னிங், ஐ.எஸ்.ஓ., இமேஜ் உருவாக்கம், CD/DVD க்களை அவை இருக்கும் நிலையில் அமைத்துக்கொள்வது, லேபிள் பிரிண்டிங் போன்ற அனைத்து வசதிகளும் தரப்பட்டுள்ளன.


யு.எஸ்.பி.,பயர்வயர் என அனைத்து டிரைவ்களுடனும் ஒத்துழைக்கிறது. இந்த புரோகிராமினை http://www.deepburner.com என்ற முகவரியில் இருந்து டவுண்லோட் செய்துகொள்ளலாம்.

# ட்ரான்செண்ட் நிறுவனத்தின் புதிய ஹார்ட் டிஸ்க்

கணனி உதிரிப் பாகங்கள் தொடர்பில் முன்னணியில் இருக்கும் பிரபல ட்ரான்செண்ட் நிறுவனம், அண்மையில் ஹார்ட் டிஸ்க் மொடல்கள் இரண்டை அறிமுகம் செய்துள்ளது. ஸ்டோர் ஜெட் 25 சி, ஸ்டோர் ஜெட் 25பி என்ற பெயரில் வெளியாகியுள்ள இவை ஸ்லிம்மாக எளிதில் எடுத்துச் செல்லும் வகையில் உள்ளன. தற்போது, யு.எஸ்.பி.,டிரைவில் இணைத்து பயன்படுத்தப்படும் ஹார்ட் டிரைவ்கள் அதிகம் பிரபலமாகி வருகின்றன. அதிக கொள்ளளவு, சிறிய சைஸ், குறைந்த



விலை என இதற்கு பல காரணங்கள் உள்ளன. இணையத்தள பயன்பாடு அதிகரித்து அதிக டேட்டா எடுத்துச் செல்லும் நிலை உருவாகும் இந்நாளில் இதுபோன்ற ஹார்ட்டிஸ்க்குகள் அதிகம் தேவைப்படும் நிலை உள்ளது.



தனிப்பட்ட நபர்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு இத்தகைய ஹார்ட் டிஸ்க்குகள் மிக உதவியாக இருக்கின்றன. ஸ்டோர்ஜெட் 25சி 320 ஜிபி கொள்ளளவுடனும், ஸ்டோா ஜெட் 25பி 250 ஜிபி கொள்ளளவுடனும் கூடிய ஹார்ட் டிரைவ்களாக அமைக்கப்பட்டுள்ளன. இவை இரண்டிலும்

**கணனி உலகம்**

ஸ்டோர்ஜெட் எலைட் சொப்ட்வேயர் தொகுப்பு இணைத்துத் தரப்படுகிறது. இதன்மூலம், இணையத்தளங்களில் தானாகப்பதிந்து இயக்கும் வசதி, மொபைல் பேவரிட்ஸ், ரகசியமாக பைல் என்கிரிப்ஷன் மொபைல் இ-மெயில், ஒன்லைன் அப்டேட், குறிப்பிட்ட கால இடைவெளியில் ஓட்டோமெடிக் அப்டேட், செக்யூரிட்டி மற்றும் பைல் சுருக்கிப் பதியும் வசதிகள் ஆகியன உள்ளன.

### சர்வதேச சமூகத்தின் செயலற்ற தன்மை குறித்து

# நோர்வே விசேட தூதுவர் போவரிடம் புலம் பெயர் தமிழ் பிரதிநிதிகள் கண்டனம்

(கொழும்பு)

புலம் பெயர்ந்த தமிழ் மக்களின் பிரதிநிதிகள் குழுவொன்று நோர்வேயின் விசேட சமாதான தூதுவர் ஹான்ஸன் போவரை ஒஸ்லோவில் சந்தித்து இலங்கை தமிழ் மக்கள் நோக்கும் அவலங்களை விளக்கியதுடன் சர்வதேச சமூகத்தின் செயலற்றத் தன்மை குறித்துகண்டனத்தை தெரிவித்துள்ளது.

முதலில் இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதை தடுக்ககத் தவறியது. இரண்டாவதாக இராணுவத் தீர்வுக்குப் பதிலாக அரசியல் தீர்வை ஊக்குவிக்கத் தவறியது. மூன்றாவதாக சர்வதேச தொண்டர் அமைப்புக்களை வாபஸ் பெறச் செய்யும் அரசாங்கத்தின் அழுத்தங்களுக்குப் பணிந்தது. தற்போது நடக்கப்போகும் இன அழிவைக் கைகட்டி பார்த்துக் கொண்டிருப்பது இதன் மூலம் இலங்கையில் தமிழர் பிரச்சினை தொடர்பாக உலகிற்கு சர்வதேசம் இலங்கைக்கு உதவியளித்து சொல்லும் செய்தி என்ன? என அவரைச் சந்தித்த பிரதிநிதிகளில் ஒருவரான அருட் தந்தை இன்பநாயகம் கேள்வி எழுப்பினார்.



அருட்தந்தை இன்பநாயகத்துடன் ஒஸ்லோ உள்ளூராட்சி கவுன்ஸின் உறுப்பினர் சுமதி விஜயாராஜ் (லேபர் கட்சி) தமிழ் பெண்கள் அமைப்பைச் சேர்ந்த வசந்தி பிரான்ஸிஸ் ஆகியோரும் இச் சந்திப்பில் பங்கு பற்றினர்.

இச்சந்திப்பின்னர் ஊடகவியலாளர்களை சந்தித் மேற்படி குழுவினர் தமிழர் பிரச்சினை சர்வதேச சமூகத்தால் ஒதுக்கப்படுவது முன்னெப்போதையும் விட தனி நாட்டுக்கான தேவையை புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியில் உணரச் செய்துள்ளது எனத் தெரிவித்தனர்.

நாம் கணிசமான எண்ணிக்கையில் தமிழ் வம்சாவளி நோர்வே மக்கள் வாழும் பல தொகுதிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் உள்ளூராட்சி கவுன்ஸிலின் அங்கத்தவர் என்ற வகையில் எம்மை பலர் தொடர்பு கொண்டு வன்னியில் வாழும்தமது உறவினர்கள் எதிர் நோக்கும் அழிவை தடுத்து நிறுத்துவதற்கு எம்மாலானவற்றை செய்யுமாறு தொடர்ச்சியாக வலியுறுத்துகிறார்கள் எனவும் அக் குழுவினர் தெரிவித்தனர்.


(அ-5)

## யுத்தத்தால் ஏற்படும் உயிரிழப்புகளுக்கு இந்தியாவே நட்டஈடு வழங்க வேண்டும்

### சோமவன்ச அமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

நமது நாட்டில் இடம்பெற்று வரும் பயங்கரவாத யுத்தத்தால் ஏற்பட்ட உயிரிழப்பு மற்றும் உடமைகள் சொத்துக்கள் வளங்கள் என்பவற்றின் அழிவுகளுக்கு நஷ்டஈட்டை இலங்கை அரசாங்கமல்ல இந்திய அரசாங்கமே வழங்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.



கண்டி பிரதான தபால் நிலைய கேட்போர் கூடத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில் வெள்ளிக்கிழமை மாலை இடம் பெற்ற இலங்கை அரசியலும் இந்தியத் தலையீடும் என்ற தலைப்பிலான கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே சோமவன்ச அமரசிங்க இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில் இந்தியாவின் ஆதிக்க விஸ்தரிப்பு கொள்கைகளினால் தான் இன்று நம் நாடு சீரழிந்துள்ளது. புலி பயங்கரவாதிகளுக்கு தமிழ் நாட்டு முகாம்களில் இராணுவ பயிற்சிகளும் ஆயுதங்களும் வழங்கியது இந்தியாவே.

தெற்காசியாவிலேயே முதன் முதலாக பயங்கரவாதத்தை நம் நாட்டிற்கு ஏற்றுமதி செய்ததே இந்தியாதான். இந்தியாவின் வெளிநாட்டு கொள்கை ஆணவமும் அகங்காரமும் கொண்ட திமிர் பிடித்த இந்திய அதிகாரிகளாலேயே வகுக்கப்பட்டுகின்றது.

நம் நாட்டில் பயங்கரவாதத்தையும் பிரிவினை வாதத்தையும் சமாதான பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்க்க வேண்டும் என ஆலோசனை கூறும் இந்தியா பஞ்சாப் பிரிவினைவாதத் தலைவர் லின்ட்டன் பாலா மற்றும் ஏனையயோரையும் பஞ்சாப் பொற் கோயிலில் வைத்து சுட்டுக்கொன்றது.

இதன்பயனாகவே இந்திய முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தியை அவரது மெய்ப்பாதுகாவலர் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார். இதைப்போன்றே புலிப் பயங்கரவாதிகளின் தலைவரான பிரபாகரனின் சகாக்கள் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை கொன்றனர்.

தங்களால் வளர்க்கப்பட்ட பயங்கரவாதத்தினாலேயே இவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 1983ஆம் ஆண்டிற்குப் பின்னர் இந்தியா இலங்கை அரசியலில் தலையிடுவதற்கான வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. இனக் கலவரத்தின் பின்னர் 1987ஆம் ஆண்டு அகதிகளை சாட்டாக வைத்து இந்திய நாட்டுப்படையை இலங்கைக்கு அனுப்பி தலையிட்டது.

நமது மக்கள் விடுதலை முன்னணியின் மறைந்த முன்னாள் தலைவர் ரோஹண விஜேவீர 1960 களில் இந்தியாவின் ஆதிக்க விஸ்தரிப்பு தொடர்பாக பேசி வந்தார். அன்று அதனை கவனத்திற் கொள்ளாது உதாசீனம் செய்தவர்கள் இன்று அக் கூற்று உண்மையானதேஎன்பதை உணர்கின்றனர். கண்கூடாகவும் காண்கின்றனர்.

இந்தியா அண்டைய நாடுகளை தங்களின் பிடியில் வைத்துக்கொண்டு ஒரு சக்கரவர்த்தி நிலையில் ஆதிக்கம் செலுத்த விரும்புகின்றது. இலங்கை வரலாற்றில் இதுவரை ஆட்சியிலிருந்த எந்தத் தலைவரும் நடந்து கொள்ளாத நிலையில் இன்றயை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியத் தூதுவரை சந்திக்க தூதுவர் இல்லத்திற்கே சென்றுள்ளார்.

தன்மானம் இல்லாத நிலையில் நம்முடைய இறைமைக்கும் சுதந்திரத்திற்கும் ஒருமைப்பாட்டிற்கும் தீங்கும் பங்கமும் உருவாக்கின்றவகையிலேயே இந்தியா தன் ஆதிக்கவிஸ்தரிப்பை மேற்கொள்கின்றது என்றார். (அ-5)

### இரகசியப் பொலிஸ் என்று கூறி தமிழர்களிடம் கொள்ளை சிங்கள நபர் கைது

(கொழும்பு)

இரகசியப் பொலிஸ் அதிகாரி என தம்மை அடையாளப்படுத்திக்கொண்டு கொழும்பின் பம்பலப்பிட்டி மற்றும் வெள்ளவத்தைப் பகுதியில் தமிழ் இளைஞர்களிடம் கொள்ளைகளை மேற்கொண்டு வந்த சிங்களவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடம் இருந்து நகைகளும் பெருந் தொகைப் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளன.

## ஆசிய வலயத்தில் இலங்கை போசாக்கின்மை குறைந்த நாடாகும்

(கொழும்பு)

ஆசிய வலயத்தில் பேசாக்கின்மை குறைவான நாடு இலங்கையாகும்மென புதிய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் உலக சுகாதார ஸ்தாபனம் ஆகியன இணைந்து இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் 18 சதவீதமான பிள்ளைகள் நீண்ட காலமாக போசாக்கு இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் 15 வீதமான பிள்ளைகள் குறுகியகால போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

உயரத்துக்கு ஏற்றவாறு எடைகாணப்படாத பிள்ளைகளின் சதவீதம் 18 ஆக அமைந்துள்ளது. போசாக்கின்மை நாட்டில் குறைவாக காணப்படுவது குறித்து திருப்தி அடைய முடியும் என சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் அதுலககந்த லியனகே சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் இந்த நிலையை தொடர்ந்தும் குறைப்பதற்கான புதிய செயற்றிட்டங்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஓ)

## அரசாங்கத்திற்கு நிபந்தனையின்றி ஆதரவளிக்க தயாரில்லை

### ஐ. தே. க. எம். பி. தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாத்தை ஒழிப்பதற்கு தேவையான ஒத்துழைப்பை நிபந்தனையின்றி வழங்குவதற்கு தயாராக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

திஸ்ஸ மஹராமயவில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய சஜித் பிரேமதாச ஒவ்வொரு விநாடியும் பொருட்களின் விலை அதிகரிக்கும் ஊழல் மோசடியில் ஈடுபடும் அரசாங்கம் ஒன்றிற்கு ஒத்துழைப்பை வழங்குமாறு கோர முடியுமா என கேள்வி எழுப்பினார்.

விடுதலைப்புலிகளைப் தோற்கடிப்பதற்காக முப்படையினரும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு தனிப்பட்ட ரீதியில் பூரண ஒத்துழைப்பை வழங்குவதற்கு தயாராக இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

யுத்தத்தை காரணங்காட்டி மோசடியில் ஈடுபடும் அரசாங்கத்துக்கு நிபந்தனையின்றி ஒத்துழைபபு வழங்கத் தயாரில்லை என்றும் இராணுவ நடவடிக்கையில் ஈடு பட்டுள்ள படையினருக்கு தனது ஒத்துழைப்பு கிடைக்கு மெனவும் சஜித் பிரேமதாசா மேலும் தெரிவித்தார். (அ-5)

## அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய புதிய கட்சிகள் விண்ணப்பம்

(கொழும்பு)

புதிய அரசியற் கட்சிகளாக தம்மை பதிவு செய்து கொள்ளும்படி 11 கட்சிகள் தேர்தல்கள் ஆணையாளருக்கு விண்ணப்பித்துள்ளன.

இவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களை தாம் பெற்றுக் கொண்டுள்ளதாக தேர்தல் செயலக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் சில மாதங்களுக்குள் நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் தேர்தல் திணைக்களத்தினால் ஏற்கனவே 60 கட்சிகள் அரசியற் கட்சிகளாகக் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பேச்சாளர் தெரிவித்தார்.

எப்படி இருந்த பொழுதிலும் 21 அரசியற் கட்சிகள் மட்டுமே தற்சமயம் செயற்டுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

ஒருவன் தன் துரதிர்ஷ்டத்தை பார்த்துச் சிரிப்பதற்கு அவனுக்கு பேரறிவு வேண்டும்.
– இந்தியா

வலம்புரி

# இலங்கை அரசுக்கு வெற்றியாகலாம் இலங்கைக்கு வெற்றி அல்ல!

கொழும்பில் வாழும் தமிழர்கள் பொலிஸில் பதிவு செய்யவேண்டுமென்ற விடயம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் அரசியல்வாதிகள், மனித உரிமை சார்ந்தோரும் மேற்படி அறிவிப்பை கண்டித்துள்ளனர். எனினும் இத்தகைய கண்டனங்கள் எதுவுமே செல்லுபடியாக மாட்டாது என்பது தெரிந்த விடயம்.

இலங்கையில் தமிழர்கள் இரண்டாம் பிரஜைகள் என்ற நினைப்பை அரசு இன்னமும் கைவிடவில்லை. இதே நினைப்பு தொடரும் வரை இலங்கையில் பெரும்பான்மை இனத்துடன் சேர்ந்து வாழலாம் என்ற சிந்தனையை தமிழர்களிடையே தோற்றுவிப்பது என்பது முடியாத காரியம்.

ஒரு நாட்டின் நிலைத்த அபிவிருத்தியும் நீடித்த அமைதியும் என்பது அந்த நாட்டிலுள்ள சட்ட வரம்புகளும் இனத்துவ ஒற்றுமையுமேயாகும்.

ஆனால் இலங்கையில் அவை எதுவுமே உருப்படியானவை அல்ல. அப்படி ஏதேனும் உண்டாயின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், கோத்தபாய ராஜபக்ஷ இலங்கைக்கு இது வெற்றிக்காலம் எனக் கூறியிருக்க மாட்டார்.

விடுதலைப் புலிகளுடன் வன்னிப் பெரு நிலப் பரப்பில் இடம்பெறும் யுத்தத்தை மையமாக வைத்துக் கொண்டே கோத்தபாய இது இலங்கைக்கு வெற்றிக் காலம் என்கிறார்.

தமிழ் மக்கள் வன்னியில் இடம்பெயர்ந்து ஆற்றலையும்போது, உணவுக்கு வழியின்றித் தவிக்கும்போது, விமானக் குண்டுத் தாக்குதல் மற்றும் எறிகணைத் தாக்குதல்களில் உறவுகளைப் பறிகொடுத்து தலையில் அடித்து கதறிக் கண்ணீர் விடும்போது, இது இலங்கைக்கு வெற்றிக் காலம் என கோத்தபாய ராஜபக்ஷ கூறுவதிலிருந்து, தமிழ் மக்கள் எந்நிலையில் இருந்தால் இலங்கைக்கு அது வெற்றி என அவர் கருதுகிறார் என்பது தெளிவாகிறது.

இலங்கை அரசுக்கு இது வெற்றிக் காலமாகலாம். ஆனால் இலங்கைக்கு இது வெற்றிக் காலம் அல்ல.

அதேநேரம் அரசிற்கு இப்போது இருக்கக் கூடிய வெற்றி கூட எதிர்காலத் தோல்வியின் அடிப்படையாக இருக்கலாம்.

எனவே இலங்கை என்ற நாட்டிற்கு வெற்றி கிடைக்கவேண்டுமாயின் அது யுத்தத்தினால் ஒருபோதும் ஏற்படமாட்டாதென்ற உண்மை மறுப்பதற்கில்லை.

இலங்கையில் என்று சமாதானம் ஏற்படுகிறதோ, என்று பல்லின சமூகம் ஒற்றுமையாக வாழ்கிறதோ அன்றுதான் இலங்கைக்கு வெற்றிக்காலம்.

அந்த வெற்றி என்பது நான் சிங்களவன், நான் தமிழன், நான் முஸ்லிம் என்ற எல்லை கடந்து நான் இலங்கையன் என்ற குரல்ஒலியில் ஏற்படுவதாகும்.

# ஆயிரத்தில் ஒருவரென வாழ்ந்த அத்தியார் அருணாசலம்

**நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியின் ஸ்தாபகர் அத்தியார் அருணாசலம் அவர்களின் நினைவு தினம் இன்றாகும்.**

*உள்ளத்தால் பொய்யாதொழுகின் உலகத்தார்*
*உள்ளத்தில் எல்லா முளன்*

என்பது பொய்யாமொழி. இக் குறளின் வண்ணம் 1961 ஆண்டு புரட்டாதி இருப்பத்திரண்டாம் நாளில் இறையடி சேர்ந்த அத்தியார் அவர்களின் நினைவு பல்லாண்டுகள் பல பல மாற்றங்கள் உண்டாகியும் மறையாமல் உள்ளமையூபாக அவரின் சிறப்பை உணரமுடிகின்றது. ***அன்ன சத் திரம் ஆயிரம் அமைப்பதிலும் ஆலயம் பதினாயிரம் எடுத்த லிலும் ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் அன்ன யாவினும் கோடி புண்ணியம்*** என்பது மகாகவி பாரதியின் கூற்று.

வலி கிழக்கில் சைவத்தமிழ் கல்வியை வளர்த்தெடுத்தலில் முன்னோடிகளாக விளங்கியோர் இருவர். ஒருவர் புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரியின் ஸ்தாபகர் மளவராயர் கந்தையா. மற்றையவர் நீர்வேலி அத்தியார் இந்துக் கல் லூரியின் ஸ்தாபகர் முதலியார் அத்தியார் அருணாசலம்.

அத்தியார் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். திறமையால் உயர்ந்து கொழும்பு கொமர்ஷல் கம்பனியில் உத்தியோகம் செய்தவர். இந்நிலையில் நீர்வேலியில் சிவசங்கர பண்டிதரால் ஸ்தாபிக்கப்பட்டு அவர் மகன் சிவப்பிரகாச பண்டிதரால் வளர்க்கப்பட்டு இயலாமை காரணமாக நடராச பண்டிதரால் கத்தோலிக்க கிறிஸ்தவ மிஷனுக்கு விற்கப்படவிருந்த *சிவப்பிரகாசவித்தியாசாலையை* அத்தியார் கடனுக்கு பணம் பெற்று விலைக்கு வாங்கினார்.

நீர்வேலியில் அத்தியார் இக்கல்லூரியை ஸ்தாபிக்காது இருந்திருப்பின் நீர்வேலியில் இன்று வரை நிலைத்துள்ள சைவத்தமிழுக்குப் பேரிழப்பும் வீழ்ச்சியும் உண்டாகி இருக்கும் என்பது மறுக்க இயலாத உண்மை. எனவே காலத்தினால் இவர் செய்த உதவி மிகப் பெரியது.

நேர்மையும் விடா முயற்சியும் நிர்வாக வன்மையும் கொண்டவர் அத்தியார். அவர் தனக்கே உரிய முதுசம், சீதனம், சொத்து இவைகளை விற்றும் ஈடுவைத்தும் கல்லூரியை நிறுவினார். என்பது அவரது உயர் உள்ளத்தைக் காட்டுகின்றது. ஒரு பெரிய கல்லூரியின் ஸ்தாபகராகிய அவரது வாழ்வு ஒரு குடிசையிலேயே காணப்பட்டது எனலாம். தன் இரத்தத்தை வியர்வையாக்கி உருவாக்கிய கல்லூரியை முடிவில் அரசிடம் ஒப்படைக்க வேண்டியதாயிற்று இந்நிலையிலும் மனைவி தங்கம்மா பெயரில் ஒரு பெண்கள் கல்லூரி நிறுவவும் திட்டமிட்டிருந்தார். ஆனால் அது இயலாமல் போயிற்று.



அத்தியார் கந்தபுராண படனத்திலும் நிகரற்றவர் எப்போதும் கந்தபுராணத் திருநூல் அவரது கைகளில் காணப்படும். தவிர. நீர்வேலி சிகரெட் புகையிலை தொழிலாளர் சங்கம், வாசிகசாலை என்பவற்றையும் இவர் நிறுவினார். நீர்வேலி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராகவும் விளங்கினார்.

அத்தியார் பற்றி சுதந்திர இலங்கையின் முதல் பிரதமர் டீ. எஸ்.சேனநாயக்கா தெரிவிக்கும் போது இம் மாபெரும் கல்லூரியைத் தன் சொத்தப் பணத்தில் நிறுவிய தருமச் செயலுக்காக இலங்கை அரசு முதலியார் அவர்களுக்கும் அவர் குடும்பத்தாருக்கும் என்றும் கடமைப் பட்டுள்ளது. என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆயிரத்தில் ஒருவரான அத்தியார் நிறுவிய அத்தியார் இந்துக்கல்லூரி இன்று ஆயிரம் பிறை கண்டு அமுத விழாக் காணும் நிலை பெற்று அத்தியாருக்கு அழியாச் சிறப்பைத் தருகிறது. எனில் மிகையல்ல.

*அத்தி பூத்ததென ஆயிரத்தில் ஒருவரென*
*அத்தியார் வாழ்ந்திருந்து அறிவு விதை தூவிட்டார்.*

**தி.மயூரகிரி -நீர்வேலி**

# எரிபொருள் விலை குறைக்கப்படாமைக்கு எதிராக நீதிமன்றம் செல்ல ஐ.தே.க முடிவு

## கறுப்புச் சந்தை வியாபாரம் நடைபெறுவதாகவும் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சர்வதேசச் சந்தையில் எரிபொருட்களின் விலைகள் குறைந்துள்ள போதிலும் நாட்டில் அவற்றின் விலைகளைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை.

எரி பொருள் விலையினை குறைக்காத அரசாங்கத்துக்கு எதிராக நாட்டு மக்களை பாதுகாக்கும் நோக்கில் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளோம் என்று ஐக்கிய தேசிய கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணா நாயக்க தெரிவித்தார். எதிர்க்கட்சி அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற செயதியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ரவி கருணாநாயக்க எம்.பி.இங்கு மேலும் கூறியதாவது,

அரசாங்கத்தில் 110 அமைச்சர்கள் இருக்கின்றனர். இவர்கள் அனைவரும் சந்தர்ப்பவாதிகள். சந்திர்ப்பவாதிகளைக் கொண்ட அரசாங்கமும் சந்தர்ப்பவாத அரசாங்கமாகவே தன்னை காட்டிக்கொண்டிருக்கின்றது. சாதாரண வியாபார ஸ்தாபனங்களில் சட்டத்தை கடைப்பிடிக்கினற நுகர்வோர் அதிகார சபையும் இன்றைய அரசாங்கமும் எரிபொருள் விடயத்தில் கணணை மூடிக்கொண்டிருக்கின்றது.

உலக சந்தையில் குறைவடைந்துள்ள எரிபொருள் விலைகளின் தன்மைக்கு அமைய உள்நாட்டில் எரிபெருளின் விலை களை 50 வீதத்தால் குறைக்க முடியுமாக இருக்கின்றது.

ஆனால், அரசாங்கம் அதனைச் செய்யவில்லை மாறாக மக்களை ஏமாற்றி பணம் பறித்துக் கொண்டிருக்கின்றது.

உண்மையில் அமைச்சர்களான பந்துல குணவர்த்தன மற்றும் பௌஸி ஆகியோர் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனர். இவர்களின் ஏமாற்று நடவடிக்கைகளுக்கு ஏனைய அமைச்சர்களும் அவர்கள் சார்ந்த அரசாங்கமும் துணையாக இருக்கின்றமை பாராதூரமான விடயமாகும்.

மின்சாரக் கட்டணம் தலை மீறிப் போயுள்ளதாகவும் இது தொடர்பில் மக்களின் சுமையை குறைக்குமாறும் தேரர்கள் நீமன்றம் செல்கின்றனர். ஆனால், சுக போகம் அனுபவிக்கும் ஜாதிக ஹெல உறுமய மக்களுக்காக என்ன செய்து கொண்டிருக்கின்றது எனக் கேட்க விரும்புகிறேன்.

மறுபுறத்தில் புதிய கட்சியை அமைத்துக் கொண்ட ஜே.வி.பி.யின் ஒரு பகுதியினர் அரசாங்கத்திற்கு முண்டு கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். அக் கட்சியின் தலைவரான விமல் வீரவன்ச எரிபொருளின் விலையை குறைப்பதற்கும் மக்களைப் பற்றி சிந்திப்பதற்கும் திராணியில்லாமல் இலங்கை ஐ. ஓ.சி. யின் இலாபத்தினைக் குறைத்து வரியை அதிகரிக்குமாறு யோசனை கூறியிருப்பது முட்டாள் தனத்திற்கு ஒப்பானதாகும்.

இனவாதக் கட்சிகளை இணைத்துக் கொண்டுள்ள கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு நாட்டு மக்களின் சுமைகளை இறக்கி வைக்க முடியாதிருக்கின்றது.

ஏனெனில் இன்றைய அரசாங்கம்கறுப்புச் சந்தை வியாபாரத்தையே கடைப்பிடித்து வருகின்றது. இதனாலேயே நாட்டிற்கு விடிவில்லாதிருகின்றது. சகலவிதத்திலும் மக்கள் நசுக்கப்படுகின்றனர். மானியங்கள் இல்லாது செய்யப்பட்டுள்ளன. வாழவே திண்டாடுகின்ற மக்களாக இலங்கையர் இருப்பது வேதனைக்குரியதாகும்.

(அ-6)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## ஆளுமையின் பல்வேறு நிலைகள்



மனிதனின் வெளிப் பொறிகள் அமைந்துள்ள இந்த உடல் தூல உடல் எனப்படுகிறது. சமஸ்கிருத்தில் இதை ஸ்தூல சரீரம் என்பர். இதற்குப் பின்னால் தான் புலன் ,மனம், புத்தி, நான்– உணர்வு என்ற தொடர் அமைகிறது. இவையும் உயிர்ச் சக்திகளும் இணைந்த ஒன்றே நுண்ணுடல் அல்லது சூட்சும சரீரம். இந்தச் சக்திகள் மிக நுட்பமான அணுக்களால் ஆனவை ; எத்தகைய தீங்கு ஏற்பட்டாலும் இந்த உடம்பு அழியாத அளவுக்கு அவை நுட்பமானவை எந்த விதமான கேடும் அதிர்ச்சியும் சூட்சும உடலைப் பாதிப்பதில்லை.

நம் கண்ணுக்குப் புலனாகும் தூல உடல் பருப்பொருளால் ஆனது; எனவே அது தொடர்ந்து புதுப்பிக்கப்படுகிறது ; மாறுபடுகிறது. உட்கருவிகளான மனம், புத்தி, நான்– உணர்வு என்பவை மிகமிக நுட்பமான பொருளால் ஆனவை. எனவே பல யுகங்களானாலும் அவை அழியாமல் இருக்கும். வேறு எதுவுமே தடை செய்ய முடியாத அளவிற்கு நுட்பமானவை இவ்வை. இவை எந்தத் தடைகளையும் கடந்து விடும். இந்தத் தூலவுடல் அறிவற்றது. நுண்ணுடலும் அதுபோன்றது தான். ஆனால் இது சற்று நுட்பமான ஜடப்பொருளால் ஆக்கப்பட்டுள்ளது.

# வன்னியில் உக்கிரமடையும் மோதல்களும் மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளும்

இந்த மாதம் முதலாம் மற்றும் இரண்டாம் திகதிகளில் அக்கராயன் தொடக்கம் நாச்சிக்குடா வரையிலுமான 25 கி.மீ. முன்னரங்கில் நடைபெற்ற கடுமையான மோதல்கள் படையினரின் முன் நகர்வுகளின் உத்திகளில் பின்னடைவை ஏற்படுத்தியதுடன் படையினரின் நகர்வுகள் மந்த நிலைக்கு சென்றிருந்தன.

இந்தப்படை நடவடிக்கையில் படையினர் கடும் இழப்புக்களை சந்தித்த நிலையில் வன்னிப் பகுதி மீது அரசாங்கம் தொடர்ச்சியான வான் தாக்குதலை நடத்தி வந்தது. இந்தநிலையில் வவுனியா படைத் தலைமையகத்தில் அமைந்திருந்த வான் கண்காணிப்பு நிலை மீது வான் புலிகள் , கரும்புலிகள் , பீரங்கிப்படையணிகள் இணைந்து மேற்கொண்ட தாக்குதல் அரசாங்கத்தை ஆட்டம் காண வைத்ததுடன் அரசாங்கத்தின் வான் பாதுகாப்பு உத்திகள் மற்றும் கட்டளை மையங்களின் பாதுகாப்பு தொடர்பாக அரசாங்கத்தை சிந்திக்க வைத்தது.



வவுனியா ஜோசெப் படைத்தளம் மீது வான் புலிகள் வீசிய குண்டுகளில் ஒன்று சிறப்பு படை கட்டளை அதிகாரி பிரிகேடியர் நிர்மல் தர்மரட்னாவின் அலுவலகத்திற்கு அண்மையில் வீழ்ந்த போதும் குண்டு வெடிக்காததால் பெரும் அனர்த்தம் தவிர்க்கப் பட்டதாக படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வவுனியா வான் படைத்தளத்தில் நிறுவப்பட்டிருந்த இந்திரா -II ராடர் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டதாக பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க தெரிவித்துள்ள அதேசமயம் இந்திரா -II ராடர் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் , அதன் முக்கியத்துவம் கருதி கட்டுநாயக்க வான் படைத்தளத்தில் இருந்த மற்றொரு இந்திரா II ராடரை படையினர் அவசரம் அவசரமாக வவுனியா வான் படைதளத்திற்கு நகர்த்தியிருந்ததாக படைத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த 9ஆம் திகதி வவுனியாவில் படை நடவடிக்கை கட்டளை மையம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கூட்டுப்படை நடவடிக்கையில் ஏற்பட்ட சேதங்களை இராணுவத்தளபதி லெப் ஜெனரல் சரத்பொன்சேகா கடந்த வியாழக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார்.

வான் புலிகளின் தாக்குதலில் சேதமடைந்த ராடர் மையத்தையும் அதன் கட்டடத்தொகுதியையும் இராணுவத் தளபதி பார்வையிட்டதாக பாதுகாப்பு இணையத்தளம் தகவல் வெளியிட்டிருந்தது. பின்னர் வவுனியா பிராந்திய கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய மற்றும் படையணிகளின் கட்டளை அதிகாரிகள், பிரிகேற் கட்டளை அதிகாரிகளை சந்தித்த பொன்சேகா படை நடவடிக்கை தொடர்பான திட்டங்களை விளக்கிய போது இராணுவம் வன்னேரிக்குளம் மீதான படை நகர்வுகளை காலை 11.30 மணியளவில் ஆரம்பித்திருந்தது.

இது இந்த வாரத்தில் ஒரே அச்சில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது படை நடவடிக்கை.58 ஆவது படையணியின் சில பற்றலியன் படையினரும் 57ஆவது படையணியின் முதலாவது பிரிகேற்றைச் சேர்ந்த சில பற்றலியன்களும் மேற்கொண்ட இந்த நகர்வுகளுக்கு எதிராக விடுதலைப்புலிகள் கடுமையான எதிர்த்தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்.

இந்த மோதலில் 25 க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 40றகு மேற்பட்டோர் காய மடைந்ததாகவும் படையினரின் இரு சடலங்களையும் இரு ஆர் பி ஜி உந்துகணை செலுத்திகள் உட்பட 9 றகும் மேற்பட்ட ஆயுதங்களையும் கைப்பற்றியுள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் கடந்த 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் வன்னியில் உள்ள பல கள முனைகளில் நடைபெற்ற மோதல்களில் 18 படையினர் கொல்லப் பட்டதாகவும் 36 பேர் காயமடைந்துள்ளதாகவும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

துணுக்காய், கல்விளான் , நாச்சிக்குடாவிற்கு தென்புறமான பகுதிகளில் விரைவான நகர்வை மேற்கொண்ட இராணுவம் அதற்கு அப்பால் எடுத்துரைக்கும் ஒவ்வொரு அடிக்கும் அதிக இழப்புகளை சந்திப்பது தென்னிலங்கையில் சல சலப்புகளை ஏற்படுத்தியுள்ளது.இந்த நிலையில் விடுதலைப் புலிகள் சி.எஸ். ரக வாயுக்களை பயன் படுத்தி வரு வதாக அரசாங்கம் கூறுகிறது.

இராணுவத் தின் 57ஆவது படையணியின் இரண்டாவது பிரிகேற்றைச் சேர்ந்த இராணுவத்தினரின் 4 பற்றாலியன் இராணுவத்தினர் பிரிகேற் கட்டளை அதிகாரி லெப் கேணல் செனராத் பண்டாரா தலைமையில் அக்கராயன் பகுதிக்கு தென்புறமாகவும், கிழக்குப்பகுதியூடாகவும் மேற்கொண்ட முன் நகர்வுக்கு எதிராக விடுதலைப்புலிகள் மேற்கொண்ட கடுமையான எதிர்த்தாக்குதல் நடத்தினர்.

57ஆவது சிறப்புத்தாக்குதல் படையணியின் பற்றலியன் துருப்புக்களுடன் சிறப்புப்படையணிகளும் இணைந்து அதிகாலை 5 மணியளவில் ஆரம்பித்த முன் நகர்வுக்கு எதிராக விடுதலைப் புலிகளின் இலகு காலாற்படைப்பிரிவினர் இம்ரான் பாண்டியன் சிறப்பு அணிகளின் உதவியுடன் மதியம் 1.30 மணி வரையில் மோதல்களில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோதல்களில் 122 மி.மீ.ஆட்டிலறிகள் மற்றும் 81 மி.மீ மோட்டார்களை அதிகம் பயன்படுத்தியதாகவும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது. இதன் போது 8 சிறப்புப்படை கொமாண்டோக்கள் உட்பட 10 படையினர் கொல்லப்பட்டதாகவும்.20 றகும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் படைத்தரப்பு தெரிவித்திருந்தது. 22 படையினர் கொல்லப்பட்டதாகவும் 53 பேர் வரையில் காய மடைந் துள்ளதாகவும் 4 சடலங்களும் , 6 ஆர்.பி.ஜிகள் , 9 இலகு இயந்திர துப்பாக்கிகள் உட்பட 37 றகும் அதிகமான ஆயுதங்களும் இந்த மோதலில் கைப் பற்றப் பட்டதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.



எம்.ஐ.-24 ரக தாக்குதல் உலங்கு வானூர்திகள், பல்குழல்உந்துகணை செலுத்திகளின் தாக்குதலுடன் மிகவும் செறிவான சூட்டாதரவை படையினர் பயன்படுத்திய போதும் அவர்கள் பலமான எதிர்த்தாக்குதலை சந்தித்துள்ளது வன்னி களமுனையில் ஏற்பட்டு வரும் மாற்றங்களையே காட்டுகின்றது.

கடந்த வாரம் மன்னாருக்கு விஜயம் மேற்கொண்ட இராணுவத்தளபதி லெப் ஜெனரல் சரத் பொன்சேகா 57ஆவது படையணியின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ், 58ஆவது படையணியின் கட்டளைத்தளபதி பிரிகேடியர் சவீந்திர சில்வா, சிறப்புப்படை கட்டளை அதிகாரி பிரிகேடியர் நிர்மல் தர்மரட்ன ஆகியோருடன் மேற்கொண்ட திட்டங்களுக்கு அமைவாகவே அக்க ராயன் பகுதியை நோக்கிய இந்த நட வடிக்கை மேற்கொள்ளபப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. எனினும் நாச்சிக்குடா - வன்னேரிக் குளம்-அக்கராயன்குளம் அச்சில் கடந்த முதலாம் மற்றும் இரண்டாம் திகதிகளில் ஆரம்பித்த மோதல்கள் 18 நாட்களை கடந்த நிலையில் தொடர்ந்துவருவது குறிப்பிடத் தக்கது. இந்த 18 நாட்களில் விடுதலைப் புலிகளின் பின் தளப்பகுதியான வன்னியில் பல பகுதிகள் மீது இலங்கை வான் படை விமானங்கள் பெருமளவான குண்டுவீச்சுக்களையும் நடத்தியிருந்தன.



இந்த குண்டுவீச்சுக்களால் பொது மக் கள் பலர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளதுடன் பெருமளவான சொத்துக் களும் அழிந்துபோயுள்ளதாக வன்னித் தகவல்கள் தெரிவித்துள்ளன. வன்னிப் பகுதியிலிருந்து ஐ.நா. அமைப்பை சார்ந்த தொண்டர் நிறுவனங்கள் உட்பட எல்லாத் தொண்டு நிறுவனங்களையும் வெளியேறுமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ள நிலையில் அங்கு தொடர்ச்சியாக வான் மற்றும் எறிகணைத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவது அங்கு வாழும் மக்களுக்கு பேரவலங்களை ஏற்படுத்தி வருகின்றது.


அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு எதிராக பல சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான அமைப்புகளும் பல நாடுகளின் பிரதிநிதிகளும் கவலை தெரிவித்துள்ள போதும் அதனால் பலன் கிட்டாமை தமிழ் மக்களை பெரும் ஏமாற்றத்திற்குள் தள்ளியுள்ளது. வவுனியா படைத்தலைமையகம் மீது வான் பலிகள் மேற்கொண்ட தாக்குதல் இந்தியாவின் இரட்டைவேடத்தை உலகறியச்செய்வது போல் இலங்கை அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை சர்வதேச சமூகத்தின் கபடத்தனத்தை வெளிச்சம் போட்டு காட்டியுள்ளது. வன்னியில் வாழும் மக்களின் மீது அரசாங்கம் கடுமையான அழுத்தங்களை பிரயோகித்தவாறு தமது படைநடவடிக்கைகளை முனைப்பாக்கி வருகையில் விடுதலைப்புலிகளின் எதிர்த்தாக்குதல் தீவிரமடைந்து வருவது அரசு தரப்புக்கு சாதகமானதல்ல.

இது படைத்தரப்பிற்கு பாரிய நெருக்கடிகளை ஏற் படுத்தியுள்ளது. மன்னார் பின் தளங்களிலிருந்து புறப்பட்ட படையினரை அவர்களின் வாசல்களில் இடைமறித்து தாக்குவதை தவிர்த்துக் கொண்ட விடுதலைப் புலிகள் 40-50 கிலோ மீற்றர் தூரத்திற்கு நகர்ந்த பின்னர் தமது பதில் தாக் குதல்களை தீவிரப்படுத்தி வருவது இராணுவத்திற்கு பலத்த நெருக்கடிகளை தோற்றுவிக்கும். 40 கிலோ மீற்றருக்கு அப் பால் நடைபெறும் மோதல்களில் காய மடையும் மற்றும் கொல்லப்படும் படையினரை பின் தளங்களுக்குச் எடுத் துச்செல்வது முன்னரங்கில் உள்ள படையி னருக்கான விநியோகங்களை சீராக பேணுவது என்பது படையினருக்கு தற்போது மிகவும் சவலான விடயங்களாக மாறியுள்ளன.

மோதல்கள் தீவிரமடையும் போது இதுமேலதிக சுமைகளை படையினருக்கு ஏற்படுத்தலாம். அக்கராயன் பகுதியில் படைத்தரப்பு எதிர்கொண்டுவரும் நெருக்கடிக்கான மூல காரணங்களில் இதுவும் ஒன்று. அதாவது விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் ஒவ்வொரு பதில்தாக்குதலின் பின்னரும் தமது படையணிகளை மறுசீரமைப்பதற்கு படைத்தரப்புக்கு முன்னரை விட அதிககாலம் எடுக்கும். இந்த நிலைமைகள் எதிர்வரும் மாதம் ஆரம்பிக்கும் பருவமழையுடன் மேலும் மோசமாகலாம் என்பதுடன் வரும் வாரங்கள் படைத்தரப்புக்கு பாரிய சவாலாகப் போவதையே நாச்சிக்குடா தொடக்கம் அக்கராயன் வரையிலும் கடந்த 18 நாட்களாக நடைபெற்றுவரும் மோதல்கள் எடுத்துக்காட்டுகின்றன.

வேல்ஸிலிருந்து அருஷ்

# யாழில் 2,650 மில்லியன் ரூபாய் கடனினை ஹற்றன் நஷனல் வங்கி வழங்கியுள்ளது



யாழ். மாவட்டத்தில் பல்வேறு துறைகளுக்கு ஹற்றன் நஷனல் வங்கி 2 ஆயிரத்து 650 மில்லியன் ரூபாய் கடனுதவியை வழங்கியுள்ளதாக வங்கியின் யாழ்ப்பாண சிரேஷ்ட முகாமையாளர் தி.ஜெயராஜசிங்கம் தெரிவித்தார்.

இதில் விவசாயத்துறைக்கு 210 மில்லியன் ரூபா கடனுதவியாக வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிபிட்டார்.

யாழ்ப்பாணத்தில் ஹற்றன் நஷனல் வங்கியின் சேவைகள் குறித்து வலம்புரிக்கு வழங்கிய செவ்வியிலேயே வங்கியின் யாழ்ப்பாண சிரேஷ்ட முகாமையாளர் தி.ஜெயராஜசிங்கம் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்நேர்காணலில் அவரால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் தொகுப்பு வருமாறு,

யாழ்மாவட்டத்தில் ஹற்றன் நஷனல் வங்கி பல்வேறு துறைகளுக்கும் 2 ஆயிரத்து 650 மில்லியன் ரூபாய் கடனுதவியை வழங்கியுள்ளது.

கடந்த 2006 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையிலும் எமது வங்கி கடன் வழங்கலை நிறுத்தவில்லை.

எனினும் அக்காலப் பகுதியில் ஏற்பட்ட தொழில் இழப்புக்கள் காரணமாக வழங்கப்பட்ட கடன்கள் முழுமையாக திரும்பப் பெற முடியாமலும் போயுள்ளது.

குறிப்பாக கடற்தொழிலில் ஏற்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக மீனவர்கட்கு ஏற்பட்ட தொழிலிழப்புக் காரணமாக வழங்கப்பட்ட கடனை முழுமையாக திரும்பப் பெற முடியவில்லை

**விவசாயக் கடன்**

யாழ். மாவட்டத்தில் தற்போது விவசாயக் கடனாக 210 மில்லியன் ரூபாயை ஹற்றன் நஷனல் வங்கி வழங்கியுள்ளது.

இவ் விவசாயக் கடனை நாம் தீவகம் முதல் அம்பன் குடத்தனை வரை அனைத்துப் பகுதிகளிலும் வழங்கியுள்ளோம்.

விவசாயக் கடனை வழங்குவதற்கு முதற்கட்டமாக வங்கியின் விவசாய உத்தியோகத்தர் குறித்த கடன் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது. எவ்வளவு தொகை குறித்த

## வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் தி.ஜெயராஜசிங்கம் வலம்புரிக்கு பேட்டி

துறைக்கு கடனாக வழங்க வேண்டும், என்ற காரணிகளை ஆராய்வார்.

உதாரணமாக, நெல்லினைக் கொள்வனவு செய்ய எம்மிடம் கடனிற்கு விண்ணப்பிப்பாராயின், அவரால் கொள்வனவு செய்யப்படும் நெல் லின் அளவைக் கொண்டே அவரால் கேட்கப் படும் கடன் தொகை வழங்கப்படும்.

இவ்வாறே விவசாயிகளுக்கு மட்டுமல்லாமல் ஹற்றன் நஷனல் வங்கியினால், சிறு கைத்தொழில்கள், கோழிவளர்ப்பு, வீட்டுப் பண்ணை என அனைத்துத் துறைகளுக் கும் கடன் வழங்கப்பட்டுள்ளது.

இத் துறைகளுக்கு குறைந்த வட்டியில் 10 மில்லியன் முதல் 50 மில்லியன் ரூபாய் வரை கடன் வழங்கியுள்ளோம்.

விவசாயத் துறைக்கான கடன்களை மீளச் செலுத்தும் திட்டத்தைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகிறது என்றார்.

**சந்திப்பு**
**ஆர்.யூ.பாலமுருகன்**

**நுகர்வோர் கடன்வசதி**

அரச ஊழியர்களாக உள்ளவர்கள் பகுதி நேர மேலதிக வருமானத்திற்காக மேற்கொள்ளும் தொழில் துறைக்கு வழங்கப்படும் கடன் திட்டமே நுகர்வோர் கடன் வசதியாகும்.

உதாரணமாக அரசாங்கப் பாடசாலை ஆசிரியர் ஒருவர் தனியார் கல்வி நிலையம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளாராயின் அதற்கு இத் திடத்தின் மூலம் குறைந்த வட்டியில் கடனைப் பெற்றக்கொள்ளலாம்.

இக் கடனைப் பெறும் உத்தியோகத்தர் ரூபா 30 ஆயிரத்துக்கு குறையாத வருமானத்தைப் பெறுவதுடன் பிணையாளிகள் இருவரது சிபார்சு பத்திரங்களை வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

**சாந்தி வீடமைப்புக் கடன்**

காணி கொள்வனவு, வீடுகட்டுதல் மற்றும் வீட்டுடன் காணி கெள்வனவு செய்வதற்கான கடன் திட்டமே ஹற்றன் நஷனல் வங்கியின் சாந்தி வீடமைப்புக் கடனாகும்.

இத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன் தொகையானது கொள்வனவு செய்யவுள்ள சொத்தின் பெறுமதியில் 60 வீதம் வரை இருக்கும்.

இதனை நீண்ட கால தவணையில் மீளச் செலுதத முடியும். அத்துடன் இக்கடனை வழங்கும் போது வீட்டின் அல்லது காணியின் உறுதியை வங்கி சட்டபூர்வமாக வாங்கிக் கொள்ளும்.

இக்கடனைப் பெறுவதற்கு மாத வருமானத்தை உறுதிப்படுத்த வேண்டும். சொத்திற்கு காப்புறுதி செய்யப்பட வேண்டும் போன்ற நிபந்தனைகளையும் வங்கி விதிக்கும்.

**"கப்பிற்றல்" சேமிப்புக் கணக்கு**

ஹற்றன் நஷனல் வங்கியால் கடந்த ஜூன் மாதம் ஆரம்பிக்கப்பட்டு பிரபல்யமாகியுள்ள சேமிப்பு வைப்பான கப்பிற்றல் சேமிப்புக் கணக்கிற்கு(Capital Savings Account) 14.5% வட்டி வழங்கப்படுகிறது.

**"சிங்கிதி" சேமிப்புக் கணக்கு**

சிங்கிதி சேமிப்புக் கணக்கானது மூன்று வகையாக பிரிக்கப்பட்டு பல்வேறு பரிசில் திட்டங்களுடன் வைப்பாளர்களுக்கு பல நன்மைகளைத் தரக்கூடிய சேமிப்புக் கணக்காக விளங்குகின்றது. சிங்கிதி சேமிப்புக் கணக்கில் முதலாவது பிரிவாக குழந்தை பிறந்து 6 மாதத்திற்குள் ஆரம்பிக்கப்பட வேண்டிய வைப்பு. இக் கணக்கில் வைப்பிலிடப்படும் தொகைக்கு ஏற்றவாறு வங்கியானது நூறு ரூபாய் முதல் ஆயிரம் ரூபாய் வரை பரிசாக வைப்பிலிடும். சிங்கிதி சேமிப்புக் கணக்கின் இரண்டா வது பிரிவு, 3 வயது முதல் 12 வயதுக்குட்பட் டவர்களுக்கான சிங்கிதி மழலைகள் சேமிப் புக் கணக்காகும்.

இக் கணக்கிற்கு ஆயிரம் ரூபாய் முதல் 2 இலட்சத்து 50ஆயிரம் ரூபாய் வரை வைப்பிலுள்ள தொகைக்கு ஏற்றவாறு வங்கி பணப்பரிசு வழங்குகின்றது.

இதில் ஆயிரம் ரூபாய் முதல் 9ஆயிரத்து 999 ரூபாய் வரையான வைப்பிற்கு தொப்பி அல்லது தண்ணீர் போத்தலும், 10 ஆயிரம் ரூபாய் முதல் 14 ஆயிரத்து 999 ரூபாய் வரைக்கான வைப்பிற்கு பாடசாலைப்பை, குடை, கைக்கடிகாரம், மணிக்கூடு மற்றும் ரீசேட் என்பவற்றில் ஒன்றினைப் பரிசாகப் பெற்றுக் கொள்ளமுடியும்.

15 ஆயிரம் முதல் 24 ஆயிரத்து 999 ரூபாய் வரையான வைப்பிற்கு ஆயிரம் ரூபாய் பணப்பரிசும், 25 ஆயிரம் முதல் 49 ஆயிரத்து 999 ரூபாய் வரையான வைப்பிற்கு ஆயிரத்து 500 ரூபாய் பணப் பரிசும், 50 ஆயிரம் முதல் 99 ஆயிரத்து 999 ரூபாய் வரையான வைப்பிற்கு 2ஆயிரத்து 500 ரூபாய் பணப்பரிசும், ஒரு இலட்சம் ரூபாய் முதல் 149 ஆயிரத்து 999 ரூபாய் வரையான வைப்பிற்கு 4ஆயிரம் ரூபாய் பணப்பரிசும், ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் முதல் 2இலட்சத்து 99ஆயிரத்து 999 ரூபாய் வரையான வைப்பிற்கு 5 ஆயிரம் ரூபாய் பணப்பரிசும் மற்றும் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட வைப்புகளுக்கு 10 ஆயிரம் ரூபாய் பணப்பரிசிலும் ஹற்றன் நஷனல் வங்கியால் வழங்கப்படுகின்றது.

**தன்னியக்க பணம்**
**மீளப்பெறும் இயந்திர சேவை**

ஹற்றன் நஷனல் வங்கி யாழ். மாவட்டத்திலுள்ள தனது 5 கிளைகளில் 6 தன்னியக்க பணம் மீளப் பெறும் இயந்திர (ATM) சேவையை வழங்கி வருகிறது.

வங்கியின் யாழ்.நகர் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள கிளையில் 2இயந்திரங்களையும் ஸ்ரான்லி வீதி, மானிப்பாய், சுன்னாகம் மற்றும் நெல்லியடிக் கிளைகளில் தலா ஒரு இயந்திரத்தையும் நிறுவியுள்ளது.

இதன் மூலம் எமது வாடிக்கையாளர்கள் அனைத்து நாட்களிலும் 24 மணி நேரமும் தமது கணக்கிலிருந்து விரைவாக பணத்தை மீள எடுத்துக்கொள்ள முடியும்.தினமும் 40 ஆயிரம் ரூபாய் வரை தமது வைப்பிலிருந்து மீளப் பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே எமது வாடிக்கையாளர்கள் அனை வரும் ஏ.ரி.எம்.அட்டையை (HNB cashline card) பெற்று பயன்பெறலாம். இதன் மூலம் வாடிக்கையாளர் தமது நேரத்தையும் வங்கியின் சேவையினையும் முழுமையாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

# சைமண்ட்ஸின் இடத்தை ஷேன் வோட்ஷன் நிரப்புவார்

## அணித்தலைவர் பொன்டிங் நம்பிக்கை

அவுஸ்திரேலிய அணியில் பங்கேற்கும் அனைத்து தகுதிகளும் வோட்சனிடம் இருக்கிறது சைமண்ட்ஸ் இல்லாத குறையை இவர் போக்குவார் என அவுஸ்திரேலிய அணித் தலைவர் பொன்டிங் தெரிவித் துள்ளார்.

இந்தியா, அவுஸ்திரேலிய அணிகள் மோதும் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் அடுத்த மாதம் 9ஆம் திகதி பெங்களூரில் ஆரம்பமாகிறது. ஒழுங்கு நடவடிக்கை காரணமாக அவுஸ்திரேலிய வீரர் சைமண்டஸ் இத்தொடரிலிருந்து நீக்கப்பட்டார். சமீபகாலமாக சிறப்பாக சகல துறையிலும் அசத்தி வந்த சைமண்ட்ஸின் இடத்தை நிரப்பும் தகுதி வோட்சனுக்கு இருக்கிறது என்கிறார் அவுஸ்திரேலிய அணித் தலைவர் பொன்டிங். ***இது குறித்து அவர் அளித்த பேட்டியில்*** சைமண்ட்ஸ் விளையாடவில்லை என்பதால் வோட்சன் கண்டிப்பாக பங்கேற்பார். முதல் போட்டியில் வோட்சன் நிச்சயம் இடம்பிடிப்பார். தற்போதைய சூழ்நிலையில் சைமண்ட்ஸுன் இடத்தை கைப்பற்றக் கூடிய தகுதிகளை கொண்ட ஒரே வீரர் இவர் தான். இவருக்கு காயம் ஏற்பட்டதால் தான் ஒரு நாள் போட்டிகளில் மட்டும் விளையாடி வந்த சைமண்ட்சுக்கு டெஸ்ட் அணியில் இடம் கிடைத்தது. தற்போது ஒழுங்கு நடவடிக்கை காரணமாக சைமண்ட்ஸ் நீக்கப்பட்டதால் வோட்சனுக்கு மீண்டும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. சமீப காலமாக வோட்சன் சிறப்பாக விளையாடி வருகிறார். இவர் ஒரு துடுப்பாட்ட வீரராக அணியி ல்இடம் பிடித்துள்ளார் பந்து வீச்சிலும் ஜொலித்தால் அது ''போனஸ்'' தான். இந்தியாவில் அனுபவ சுழற்பந்துவீச்சாளர்கள் இல்லாமல் களமிறங்குவது கடினமான விடயம் என்றாலும் மெக் கெயின், கிரஜ்ஜா நன்றாகப் பிரகாசிப்பார்கள் என நம்புகிறேன். இவர்கள் இருவரும் மற்றவர்களை விட வித்தியாசமானவர்கள்.ஆறுஆண்டுகளுக்குமுன்பே கிரஜ்ஜாவை பார்த்திருக்கிறேன். முதன் முறையாக பார்த்தவுடனே இவரது பந்து வீச்சு என்னைக் கவர்ந்துவிட்டது.

இவர் மற்றவர்களை விட பந்தை நன்றாக சுழற்றக்கூடியவர் கடந்த முறை எங்கள் திட்டம் நன்றாக செயல்புரிந்தது. இந்திய வீரர்களுக்கு நெருக்கடி கொடுத்து தொடரைக் கைப்பற்றினோம். சூழ்நிலைகள் ஒத்துழைத்தால் இம்முறையும் சிறப்பாக செயல்படுவோம் என பொன்டிங் தெரிவித்தார். (5)

# ஐ.சி.எல்லில் இணைந்தால் யூசுப்பிற்கு தடை விதிக்கப்படும்

## பாக். கிரிக்கெற் சபை எச்சரிக்கை

பாகிஸ்தான் கிரிக்கெற் அணியின் சிரேஷ்ட வீரரான மொஹமட் யூசுப் இந்திய கிரிக்கெட் லீக் (ஐ.சி.எல்) போட்டிகளில் பங்கு பற்றினால் அவருக்குத் தடைவிதிக்கத் தயங்கப் போவதில்லை என பாகிஸ்தான் கிரிக்கெற் சபை எச்சரித்துள்ளது.

ஐ.சி.எல். போட்டிகளில் விளையாடிய வீரர்கள்அனைவரையும் நாம் தடை செய்துள்ளோம். யூசுப்பும் அங்கீகரிக்கப்படாத அந்த லீக்கில் விளையாடினால் அவருக்கும் அதே தண்டனை அளிக்கப்படும் என பாகிஸ்தான் கிரிக்கெற்சபை அதிகாரியொருவர்கூறியுள்ளார்.

உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராக விளங்கும் மொஹமட் யூசுப்பை டெஸ்ட் போட்டிகளுக்கான வீரராகவே பாகிஸ்தான் கிரிக்கெற் சபை கருதுகிறது.

50 ஓவர் 20 ஓவர் போட்டிகளுக்கான பாகிஸ்தான் அணியில் தனக்கு எதிர்காலத்தில் வாய்ப்பு வழங்கப்படமாட்டாது எனக் கருதுவதால் ஐ.சி.எல் போட்டிகளில் பங்கு பற்ற அவர் தீர்மானித்துள்ளார்.

அடுத்த மாதம் கனடாவில் நடைபெறவுள்ள இருபது-20 சுற்றுப் போட்டிக்கு யூசுப் தெரிவுசெய்யப்படமாட்டார் என எதிர்பார் க்கப்படுகிறது.

எனினும் தன்னால் இன்னும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகளில் சிறப்பாக விளையாட முடியும் என நம்பும் யூசுப் இப்போட்டிகளிலிருந்து தாம் ஒதுக்கப்படுவது தனக்கு இழைக்கப்படும் அவமரியாதையாக கருதுகிறார்.

தென்னாபிரிக்காவில் நடைபெற்ற இருபது-20 உலகக்கிண்ணப் போட்டிகளுக்கான பாகிஸ்தான் அணிக்கு மொஹமட் யூசுப் சேர்க்கப்பட வில்லை. அதனால்அவர் ஐ.சி.எல்லில் இணையத் தீர்மானித்தார். இதற்காக ஐ.சி.எல்லுடன் அவர் ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டார். எனினும் பின்னர் ஐ.சி.எல்லில் சேராமல் பாகிஸ்தான் கிரிக்கெற் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இந்திய பிரிமியர் லீக்குடன் (ஐ.பி.எல்) ஒப்பந்தம் செய்தார்.அதையடுத்து யூசுப் மீது ஐ.சி.எல் வழக் குத் தொடுத்தது. இதனால் எந்தவொரு லீக்கிலும் பங்குபற்றமுடியாத நிலை அவருக்கு ஏற்பட்டது.

இந்நிலையில் நீதிமன்ற வழக்கை சுமுகமாக தீர்த்துக் கொண்டு ஐ.சி.எல் போட்டிகளில் விளையாடுவதற்கு யூசுப் தீர்மானித்துள்ளார் எனஅவருக்கு நெருக்க மானவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (5)

மாநகர சபை, யாழ்ப்பாணம். மாநகர சபை, யாழ்ப்பாணம்.
நகர... மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# முன்னாள் ஜனாதிபதி...

டத்தில் உடுநுவர தேர்தல் தொகுதியின் பொல்அங்க பிரதேசத்தை பிறப்பிடமாகக் கொண்ட டி.பி.விஜய துங்க கம்பளை புனித அன்ட்ரூ வித்தியாலயத்தில் தமது ஆரம்பக் கல்வியை மேற்கொண்டு வந்துள்ளார்.

கல்வியின் பின்னர் கூட்டுறவுப் பரிசோதகராக தொழில் புரிய ஆரம்பித்தார். பின்னர் அக் காலகட்டத்தில் அமைச்சராக இருந்த ஏ.இரத் நாயக்காவின் பிரத்தியேக செயலாளராக பதவி வகித்தார்.

பின்னர் 1965ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக உடுநுவர தொகுதியில் போட்டியிட்டு 3 ஆயிரத்து 59 அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினரானார்.

இவருக்கு நிதியமைச்சர் பதவியும் இலங் கையின் 12-வது பிரதமர் பதவியும் வழங்கப்பட்டது. இதன் பின்னர் இராஜாங்க பாது காப்பு அமைச்சரான ரஞ்சன் விஜயரட்ன மரணமானதையடுத்து பாதுகாப்பு அமைச்சர் பதவியையும் இவர் பொறுப்பேற்றிருந்தார்.

1993ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ படுகொலை செய்யப்பட்டதையடுத்து இவர் ஜனாதிபதிப் பதவியை ஏற்றார்.

1994ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை மிகச் சாதாரண மான வகையில் நடத்தினார். இதில் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்காவின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெற்றி பெற்று அவர் பிரதமர் பதவியை வகித்தார்.

இதன் பின்னர் 1994ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்தினார். இதில் பிரதமராக இருந்த திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க வெற்றி பெற்று ஜனாதிபதிப் பதவியை ஏற்றுக் கொண்டதையடுத்து ஜனாதிபதி டி.பி.விஜயதுங்க ஓய்வுபெற்றார்.

நீண்டகாலமாக சுகவீனமுற்றிருந்த இவர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கண்டி வைத்தியசாலையில் பிரத்தியேக வாட்டில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுக்காலை இவர் மரணமடைந்தார்.

இவர் கடந்த பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி தனது 92 வயதை தமது பொல்அங்க வீட்டில் கொண்டாடியமை குறிப்பிடத்தக்கது.

(ச-5)

# தமிழர்களை பிற நாட்டவ...

ணியின் தேசிய அமைப்பாளரும் மேல்மாகாண சபை உறுப்பினருமான பிரபா கணேசன் ஊடகங்களிற்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மனித நேயத்திற்கு அப்பாற்பட்டு ஒரு சிலரை மட்டும் வேறுபடுத்திக் காட்டும் இந்த நடவடிக்கைகளை சர்வதேச சமூகத்தின் கவ னத்திற்கு கொண்டு சென்றுள்ளோம். யுத்தம் நடைபெறுகின்றது என்ற அடிப்படையில் எதை வேண்டுமென்றாலும் செய்யலாம் என்ற அரசாங்க பாதுகாப்பு தரப்பினரின் போக்கு அடாவடித்தனமானதாகும்.

வடக்கில் யுத்தத்தில் வெற்றி பெற்று தமிழ் மக்களிடையே ஜனநாயகத்தை ஏற்படுத்தப் போவதாக பிதற்றும் அரசாங்கம் கொழும்பில் தமிழ் மக்களின் மனித உரிமைகளை மீறிச் செயற்படுகிறது.

வெறுமனே அரசாங்கத்திற்கு கண்டனம் தெரிவித்துவிட்டு வாய்மூடி இருப்பதற்கு நாங்கள் அரசாங்கத்தின் பங்காளிகள் அல்லர்.

ஆகவே சர்வதேச மட்டத்திற்கு இவ்விடயத் தை ஏற்கனவே எடுத்துச் சொல்லியுள்ளோம். சர்வதேச அழுத்தங்கள் காரணமாக அரசாங்கத்தின் பல்வேறு மனித உரிமை மீறல் செயற்பாடுகளை நாங்கள் கட்டுப்படுத்தியுள்ளோம் என்பது விடயமறிந்தவர்களுக்கு நன்கு தெரியும்.

இப்படியான தமிழ் மக்கள் மீதான வேறுபாடுகளை அரசாங்கம் அமுல்படுத்துமாயின் இனங்களிற்கிடையே மாறுபட்ட உணர்வுகளை வளர்ப்பதற்கே இது உதவும்.

வெறுமனே வடக்கில் யுத்தத்தை வென்று தமிழ் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படும் என அரசாங்கம் கூறிவருவதை நிறுத்தி விட்டு முதலில் தென்னிலங்கையில் தமிழ் மக்களுக்கு அச்சமின்றி, சுதந்திரமாக வாழக் கூடிய சூழ்நிலையை உருவாக்கிக் காட்ட வேண்டும்.

அதைவிடுத்து இப்படியான காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகளைக் கொண்ட அரசுகள் எந்தச் சரித்திரத்திலும் நிலைத்து நின்றதில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டுமென அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-5)

அநாதரட்சகவிநாயகர் துணை



## கணேசா விவாக சேவை
## GANESHA VIVAHA SEVAI

B.Arunthavam
Regd No:- VADA/N/B.C/559



'Arunthava Mahal',
Alvai North, Alvai.

எமது திருமண சேவையின் ஊடாக திருமணத்திற்குரிய மணமக்களை ஒழுங்கு செய்பவர்கள் மணமக்களின் பெற்றோர் விரும்பும் தகவல்களை கூறுவதற்கும் ஜாதகக் குறிப்பில் தவறு இருப்பின் அதை சரிதானா என கணிப்பதற்கும் விண்ணப்பிப்பவர் பெற்றோர் சோதரர் தானா என்பதனை அறிந்து சரியான தகவல்களைக் கொடுத்து நேர்மையான வகையில் எமது தரகு சேவையில் செய்யவே கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை உண்மையாக அறியத்தரின் உங்களுக்கு பொருத்தமான மணமக்களை தேர்வு செய்வதற்கு உதவியாக அமையுமென்பதை தங்களுக்கு அறியத் தருகிறோம். மணமக்களின் பெற்றோர் அல்லது சோதரர் தங்கள் அடையாள அட்டை போட்டோப் பிரதி இணைத்து மட்டும் தொடர்பு கொள்ளலாம். ஜாதகரின் ஜாதக போட்டோப் பிரதி, பிறந்த திகதி, நேரம், மதம், மரபு, அதிர்ஷ்ட விஞ்ஞானம் பார்ப்பவராயின் ஜாதகருக்கு பொருத்தமான பிறப்பு எண், கூட்டெண், பிறப்பு அத்தாட்சிப் பத்திர பிரதி அல்லது அடையாள அட்டைப் பிரதி, ஜாதகரின் நிழல் படம் 2, சித்தியெய்திய கல்வித் தகைமை, தொழில் புரிபவராயின் தொழில், திணைக்களம், மணமக்களிடையே உள்ள வயது வித்தியாசம் அரசாங்க அல்லது தனியார் நிறுவனத்தின் பெயர், வர்த்தக உரிமையாளரா? அல்லது வர்த்தக பங்குதாரரா? வர்த்தக நிலையத்தில் வேலை செய்பவரா? வாகன உரிமையாளரா? சுயதொழில், நாட்கூலி, ஜாதகரின் உயரம், நிறம், விரும்பும் நிறம், உயரம், சைவ போசனம் உண்பவரா? அசைவ போசனம் உண்பவரா? கோரும் சீதனம், பொருள், வீடு, தேவைப்படும் மாவட்டம், கிராமம்.

பெண் ஜாதகரினால் கொடுக்கக் கூடிய சீதனம், பொருள், வீடு, அமைந்துள்ள மாவட்டம், கிராமம், அவரின் கிராமசேவகர் பிரிவு, அவரின் பிரதேச செயலாளர் பிரிவு, ஜாதகர் வதியும் மாவட்டம், திருமணம் செய்ய விரும்பும் மாவட்டம், கிராமம், திருமணம் செய்ய விரும்பாத மாவட்டம், கிராமம், முக்கியமாக விரும்பும் நட்சத்திரங்கள், விரும்பாத நட்சத்திரங்கள், கிரகபாவ வித்தியாசம், எவ்வாறு அமையவேண்டும்? ஜாதகரின் கிரகபாவம், ஜாதகருக்கு அரச தொழில் செய்யும் மணமகள் தேவையா? ஜாதகருக்கு அரச தொழில் செய்யும் மணமகன் தேவையா? இல்லையேல் என்ன தராதரத்தில் மணமகன் அல்லது மணமகள் தேவை.

ஜாதகரின் ஜாதகம் வாக்கிய பஞ்சாங்கப்படியா? அல்லது திருக்கணித பஞ்சாங்கப் படியா? கணிக்கப்பெற்றது. ஜாதகரின் குடும்ப விபரம், ஜாதகரின் குடும்பத்தினர், முன்பு வசித்த விலாசம், தங்களுடன் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம், வெளிநாடுகளில் வதியும் மணமகன் அல்லது மணமகளாயின் வதியும் நாடு மணமகன் அல்லது மணமகள் **(P.R)** நிரந்தர வதிவிட உரிமையுள்ளவரா? இல்லாதவரா?

குறிப்பாக கட்புலன் செவிப்புலனற்றோர், குள்ளமானவர்கள், பிறவியில் ஊனமுற்றவர்கள், விபத்து மூலம் ஊனமுற்றோர் போன்றவர்களின் பூரண விபரங்கள் வழங்குமிடத்து அவர்களுக்கு எமது சேவை மூலம் அவர்களுக்கு ஏற்ற விவாக ஒழுங்குகளும் எம்மால் ஒழுங்கு செய்து தர முயற்சி செய்வோம்.

மறுமணம் செய்ய விரும்பும் மணமக்கள் தாரமிழந்திருப்பின் அத்தாட்சிப் பத்திர பிரதி தரவேண்டும். மணம் முறிவுற்று பிரிந்திருந்தால் விவாகரத்து அத்தாட்சிப் பத்திரம் பிரதி தரவேண்டும். பழைய சம்பிரதாயங்கள் ஒன்றும் தேவையில்லை. நாங்கள் சமூக சீர்திருத்த வாதி, இலட்சியவாதி, எங்களுக்கு ஆணுக்கு பெண் இருந்தால் போதும். எதுவித சீர்வரிசைகளையும் வேண்டாம் என்று கூறுவீர்களாயினும் அதேபோல் ஆண் பெண் இருவீட்டாரும் கூறி விண்ணப்பிப்பாராயினும் இரு பகுதியினரின் கூற்றுக்கு அமைய விண்ணப்பம் கிடைத்தால் உங்களுக்கு ஒழுங்கு செய்து தர முயற்சிப்போம்.

தரகு தொழில் என்பது தராசு போன்று நடுநிலை வகிக்க வேண்டிய தொழில் என்பதனால் தங்களுடைய உண்மையான விபரங்களை கோருவதன் மூலம் விவாகத்தில் ஈடுபடும் இரு பகுதியினருக்கும் எதுவித பாதிப்பும் ஏற்படாவண்ணம் நிறைவேற்றும் பொருட்டே மேற்கூறிய விபரங்களை நிதானத்துடன் எதிர்பார்க்கின்றோம் என்பதனை அறியத் தருகின்றோம்.

எந்தவொரு விவாக சேவையினரது விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் தங்களின் சிரமத்தைக் குறித்து ஏற்றுக் கொள்ளப்படும். உங்கள் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்று ஒரு வாரத்தினில் உங்களிடம் தொலைபேசி மூலமாகவோ கடித மூலமாகவோ அல்லது நேரிலோ நானோ அல்லது எனது பிரதிநிதியோ தொடர்பு கொள்வோம். சாதாரணமாக திருமண சேவை என்று விளம்பரம் செய்யாது சகல விபரத்தையும் கோருவது தங்கள் நலன் சார்ந்தே.

**லக்ஷ்ஷ இலட்சிய லட்ஷணமே விவாக நிறைவாகும்** (C-1578)

# யாழ்.கச்சேரியடியில்...

என சடலத்தில் இருந்து மீட்கப்பட்ட அடையாள அட்டையின் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மாலை 3 மணியளவில் கச்சேரி-நல்லூர் வீதியிலிருந்து பாரதி ஒழுங்கை வழியாக சென்று கொண்டிருந்த பிரஸ்தாப இளைஞன் பெண்கள் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது பின் தொடர்ந்து சென்ற ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் காலில் படுகாயமடைந்த நிலையில் ஓடிச் சென்று கச்சேரி ஒழுங்கையிலுள்ள வீடொன்றினுள் அடைக்கலம் புகுந்துள்ளார்.

எனினும் குறித்த இளைஞனை துரத்திச் சென்ற ஆயுததாரிகள் அவ்வீட்டினுள் வைத்து இளைஞன் மீது துப்பாக்கிச் சூடு நடாத்திவிட்டு அவரிடமிருந்த கையடக்கத் தொலைபேசியையும் எடுத்துச் சென்றுள்ளனர் என விசாரணைகளின் போது யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் சடலத்தில் இருந்து மீட்கப்பட்ட தேசிய, விசேட அடையாள அட்டைகள் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் என்பவற்றை கொண்டு அடையாளம் காணப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.நீதவான் ஆர்.வசந்தசேனன் பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். உறவினர்களால் அடையாளம் காட்டும் பொருட்டு யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்குமாறு வைத்தியசாலை நிர்வாகத்திற்கும் பணிப்புரை விடுத்தார்.

(எ-5)

# வன்னிப்...

குண்டு வீச்சு விமானங்கள் விடுதலைப் புலிகள் ஒன்றுகூடும் இடமொன்றின் மீதும் அவர்களது தளமொன்றின் மீதும் குண்டுகளை வீசியிருப்பதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்திருக்கிறது.

மேலும் கிளிநொச்சி மாவட்டம் கொக்காவில் பகுதிகளில் தற்போது படையினர் தனது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்திருக்கின்றது.

இதேவேளை வவுனியா, கிளிநொச்சி, வெலிஓயா போர் முனைகளில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவத்தினர் மேற்கொண்ட வெவ்வேறு தாக்குதல் சம்பவங்களில் குறைந்தது 20 விடுதலைப் புலிகளும் 4 இராணுவத்தினரும் கொல்லப்பட்டிருப்பதாகவும் இராணுவத் தலைமையகம் தெரிவித்திருக்கிறது.

(ச-3)

# விடுதலைப் புலிகள்...

படைத்தளத்தின் வான்படை கட்டளை அதிகாரி குறூப் கப்டன் றொமேஷ் பெர்ணாண்டோ இக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இத்தாக்குதலின் போது படைத்தளத்தில் காணப்பட்ட பாதுகாப்பு குறைபாடுகள் தொடர்பாக ஆய்வுகளை அக்குழு மேற்கொள்ளவுள்ளது.

மேலும் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இந்திரா இருபரிமாண ராடர் சேதமடைந்ததுடன் அதனை ஒத்த மேலும் பல முக்கிய இலக்குகளும் குறி வைக்கப்பட்டிருந்தன.

எனினும் பாதுகாப்பு காரணங்களை முன் னிட்டு அதனை வெளியிட முடியவில்லை.

இதனிடையே விடுதலைப் புலிகள் ஒரு தொகுதி ஆயுத தளபாடங்களை தருவித்துள் ளதாக தெரிவிக்கப்படுகின்றபோதும் அதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

நான்காவது ஈழப்போர் ஒரு முக்கிய கட்டத்தை அடைந்துள்ளது. விடுதலைப் புலிகள் தீவிர எதிர்ப்பை காட்டி வருகின்றனர். அவர்களின் வலிமையை குறைத்து மதிப்பிட முடியாது.

விடுதலைப் புலிகளின் 80 விகிதமான பலத்தை முறியடித்து விட்டதாக படைத்தரப்பு தெரிவித்து வருகின்ற போதும் அண்மைய வாரங்களில் விடுதலைப் புலிகளின் எதிர்த் தாக்குதல்கள் தீவிரம் பெற்று வருவது குறிபிடத்தக்கது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-5)

# திருக்கோணேஸ்வரத்...

மாலை 5.45 மணியளவில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரி யாத இரு நபர்களே ஆலய குரு மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாக திருகோணமலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்திலேயே ஆலய குரு கொல் லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. கொல்லப்பட் டவர் அல்வாய் வடமேற்கு திக்கம் காளிகோயி லடியை பிறப்பிடமாகக் கொண்ட நான்கு பிள்ளைகளின் தந்தையான சிவகடாட்ச சர்மா சிவகுகராஜாக் குருக்கள் (வயது-39) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 7 வருடத்திற்கு முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்குச் சென்று வசித்து வந்ததாக தெரிவிக்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசா ரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ச-5)

# அரசிற்கு எதிரான...

குறிப்பிடத்தக்கது.

17 ஆவது திருத்தச் சட்டமூலம் அமுல் படுத்தப்படாமையினால் நாட்டின் சட்டம் ஒழுங்கு மிக மோசமான வகையில் பாதிக்கப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்ற நீதவான் சலீம் மர்சூக் அண்மையில் தெரிவித்திருந்தார்.

ஓய்வு பெறும் வயதெல்லையை நீடித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளியிட்டிருந்த விசேட வர்த்தமானிக்கு எதிராக மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் அடிப்படை உரிமை மனுவொன்றைத் தாக் கல் செய்திருந்தது.

இந்த மனு தொடர்பான விசாரணைகள் இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளது.

இதேவேளை ஐந்து வருடங்களுக்குள் கொழும்பில் குடியேறிய வடக்கு கிழக்கு தமிழர்கள் தொடர்பான கணக்கெடுப்பு தொடர்பில் மற்றமொரு அடிப்படை மனித உரிமை மீறல் மனுவொன்று இன்றைய தினம் தாக்கல் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(அ-5)

# ஆயிரக்கணக்கான வடபகுதி...

இந்த விசேட பதிவு நடைமுறைக்குட்படுத்தப்பட்ட மக்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் பதிவுகளை மேற்கொண்டனர். பெருமளவு பொலிஸார் பதிவு நடவடிக்கைகளில் ஈடுபடுத் தப்பட்டனர்.

வடமாகாணத்தில் இருந்து மேல் மாகாணத்திற்கு வந்து தற்காலிகமாக தங்கியுள்ள மக்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் மேல் மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களிலும் நேற்றுக்காலை 8 மணி முதல் 6 மணிவரை இடம்பெற்றன.

மேல் மாகாணத்திலுள்ள சுமார் 108க்கும் மேற்பட்ட பதிவு நிலையங்களில் பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் ஒத்துழைப்புடன் இந்தப் பதிவு நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு வடக்கு, கொழும்பு மத்திய பிரிவு, கொழும்பு தெற்கு,நுகேகொடை,கல்கிசை, பாணந்துறை, களுத்துறை, களனி, கம்பஹா, நீர்கொழும்பு ஆகிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 108க்கும் அதிகமான பதிவு நிலையங்களிலேயே இந்த பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பொலிஸ் நிலையங்களின் இட நெருக்கடியை தடுப்பதற்காகவும் பொதுமக்களின் வசதிக்காகவும் இதற்கென பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் இந்த பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழர்கள் செறிந்து வாழும் இடங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பதிவு நிலையங்களும் ஏனைய இடங்களில் குறிப்பிட்ட பொலிஸ் பிரிவுக்கு ஒரு பதிவு நிலையம் என்ற அடிப்படையிலும் அமைக்கப்பட்டிருந்தன.

நேற்றுக்காலை 8 மணியளவில் ஆரம் பிக்கப்பட்ட இந்த பதிவு நடவடிக்கையின் போது ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் தமது குடும்ப உறுப்பினர்கள் சகிதம் சென்று பதிவுகளை மேற்கொண்டனர்.

மேல் மாகாணத்தில் வாடகை அடிப்படையில் தங்கியிருப்போர் தமது வீட்டு உரிமையாளருடன் சென்று உறுதிப்படுத்தி பதிவுகளை மேற்கொண்டனர். அவ்வாறு வீட்டு உரிமையாளருடன் செல்லாதவர்கள் சில பதிவு நிலையங்களில் வீட்டு உரிமையாளரை அழைத்து வருமாறும் திரும்பி அனுப்பப்பட்டனர்.

அதேநேரம் கொழும்பிலுள்ள தற்காலிக தங்குமிடங்களில் தங்கியிருந்த வடமாகாணத்தவர்கள் விடுதி உரிமையாளர்களால் நேற்றுக் காலை வேளையிலேயே பதிவுக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஏற்கனவே பதிவு செய்த பத்திரத்துடன் சென்றவர்களும் தமது ஆளடையாளம் மற் றும் இருப்பிடத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்களைக் கொண்டு சென்றோரும் இதற்கு முன்னராக பதிவு நடைமுறையை விட குறைந்த கெடுபிடிகளுடன் பதிவுகளை மேற்கொள்ள முடிந்ததாக கூறப்படுகிறது.

(ச-5)

# மரண அறிவித்தல்

## சிவகடாட்ச சர்மா சிவகுகராஜக் குருக்கள்

அல்வாய் வடமேற்கு திக்கம் காளிகோவிலடியை பிறப்பிடமாகக் கொண்டவரும் திருகோணமலை கோணேஸ்வரர் ஆலய பிரதம குருக்களுமான **சிவகடாட்ச சர்மா சிவகுகராஜக் குருக்கள்** நேற்று திருகோணமலையில் அகாலமரணமடைந்துவிட்டார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

அல்வாய் வடமேற்கு,
திக்கம்.
தொ.பே:-0602212971

தகவல்:
சி.குகசர்மா (சகோதரன்)

(C-1582)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.